பக்கங்கள்-16 23.ஆடி.2023 விலை-30.00

பாபு தையல் இயந்திரம் திருத்துமிடம்



0776906182

# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of. N.A :- RBN/4/3/06

கலையரசி நகைமாடம்



T.P- 0770457661

மலர்-01 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் – 417



## குருந்தூர் மலை விவகாரத்தில் பௌத்த பேரினவாதம்

### - சிரேஷ்ட சட்டத்தரணி தயாபரன்



## வடகிழக்கு இணைந்த காணி, பொலிஸ் அதிகாரம் இல்லையென்றால், போராடுவதைத் தவிர வேறு வழியில்லை




## நெருக்கடி மத்தியில் வாழ்வாதாரம், கடன் மற்றும் சமூகப் பாதுகாப்பு

-இது தமிழ் பேசும் மக்களின் இதயத்துடிப்பு-

## சிரேஷ்ட சட்டத்தரணி தயாபரன் அவர்களுடனான சிறப்பு நேர்காணல்



# குருந்தூர் மலை விவகாரத்தில் பௌத்த பேரினவாதம்

**கேள்வி : இன்றைய சமகால அரசியலில் சட்டம் - நீதி என்பது ஒழுங்காக பயணிக்கிறதா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. சட்டம் தன் கடமையைச் செய்கிறதா? செய்வதற்கு தடைகள் இருக்கிறதா? இதற்கான உதாரணமாக தற்போது தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற போர்வையில் தமிழ் மக்களது பிரதேசங்களில் நிலம் அபகரிக்கப்படுவதிலும், வடகிழக்கில் பௌத்த விகாரைகளை அமைப்பதிலும் அரசாங்கம் நீதியற்றுச் செயற்படுகின்றது. நீதிமன்றத்தையும், நீதிபதிகளையும், சட்டத்தரணிகளையும் அவமதிக்கின்ற விதத்தில் நாம் எதுவேண்டுமென்றாலும் செய்யலாம் என்கின்ற நிலைப்பாட்டை தற்போதைய அரசாங்கம் கொண்டிருக்கின்றது. இது தொடர்பாக உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : இலங்கையைப் பொறுத்த வரையில் மத உரிமை என்பது இலங்கையின் அரசியலமைப்பில் அங்கீகரிக்கப்பட்டு அடிப்படை உரிமை என்கின்ற விடயத்தில் அதாவது 1978ஆம் ஆண்டு இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியல் யாப்பின் அத்தியாயம் 03இல் உறுப்புரை 10 மத உரிமை அடிப்படை உரிமை என்ற விடயத்தைக் குறிப்பிடுகிறது. ஒவ்வொருவரும் தாம் விரும்புகிற மதத்தை நம்பிக்கையுடைவராக இருக்கக்கூடிய அல்லது மேற்கொள்வதற்கான சுதந்திரம் அல்லது சிந்தனை செய்யும் சுதந்திரம் மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் மதச் சுதந்திரம் என்பவற்றுக்கு உரித்துடையவராதல் வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

அடிப்படை உரிமை மத உரிமை என்பது மிக முக்கியமான விடயம். அது எமது முதன்மைச் சட்டமாகிய அரசியலமைப்பில் அடிப்படை உரிமை என்ற தலைப்பில் முதலாவதாக குறிப்பிடப்படுகின்ற உரிமை. ஒரு நபரின் மத உரிமை அல்லது வழிபடுவதற்கான உரிமை அல்லது நம்பிக்கைக்கான உரிமையை யாரும் தடை செய்ய இயலாது. குறிப்பாக அரச நிர்வாகத்துறையோ அல்லது எந்தவொரு நபராலும் இந்த உரிமை தடுக்கப்பட முடியாது. அவ்வாறு இந்த உரிமை தடுக்கப்படுமாகவிருந்தால் இலங்கையின் அதி உச்ச நீதிமன்றம் என்று கூறப்படுகின்ற உயர் நீதிமன்றத்திலே அடிப்படை உரிமை மீறல் என்கிற ரீதியில் வழக்குத் தாக்கல் செய்து அதற்கான பரிகாரத்தினைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அரசியலமைப்பு கூறுகின்றது. எனவே பெரும்பான்மையோ சிறுபான்மையோ இங்கிருக்கின்ற எவருக்கும் அவர் விரும்பும் மதத்தினை பின்பற்ற உரிமை உண்டு.

அவ்வாறு அந்த மதத்தினைப் பின்பற்றிக்கொண்டு வருகின்ற சந்தர்ப்பத்திலே இன்னுமொரு மதப் பிரிவினர் அதிகாரத் தோரணையில் அதிகாரத்தினைப் பயன்படுத்தி அந்த சிறுபான்மை இனங்கள் பின்பற்றுகின்ற மதத்தை வழிபாட்டுரிமையைத் தடைசெய்வது கண்டிக்கத்தக்க விடயம். அந்த அடிப்படையில் முல்லைத்தீவு மாவட்டத்தின் குருந்தூர் மலையில் இருக்கின்ற வழிபாட்டு இடம் சம்பந்தமாக தமிழர் இந்துக்கள் என்று கூறப்படுகின்ற ஒரு வாதம் இது தொன்மையான பகுதி. இங்கு சிவன் ஆலயம் இருந்த பகுதி என்பது. பௌத்தர்கள் அது பௌத்த மதத்திற்குரிய அடையாளம் என்கிறார்கள். இரு தரப்பினர் இந்த இடத்திற்காக வாதிட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த சந்தர்ப்பத்தில் அரசாங்கம் ஒருநடுநிலையாகச்செயற்படவேண்டும். இதில் யாருடைய பக்கச்சார்பாகவும் அவர்கள் நிற்கவேண்டிய தேவை இல்லை. இரு தரப்பினரும் அது தங்கள் தங்களுடைய இடம் என வாதிட்டு வருவதால் முரண்பாடான நிலையினைத் தோற்றுவித்துள்ளது. இதில் நடுநிலையாகச் செயற்பட்டு உரிய ஆராய்ச்சிகளை மேற்கொண்டு இது யாருக்குரியது என்பதைக் கூறவேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது. அரசு அந்த விடயத்தைக் கவனமாகச் செய்யவேண்டும்.

**கேள்வி : குருந்தூர் மலை விவகாரத்தில் நீதிமன்றக் கட்டளை மீறப்பட்டு விகாரை கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இந்துக்களின் வழிபாட்டுப் பொருட்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது. நீதிபதிகளும் சம்பவ இடத்திற்கு கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டுள்ளனர். தமிழர்கள் வழிபாட்டிற்கு நீதிமன்றத்தின் அனுமதி பெற்ற பின்னர் அங்கு சென்றபோதும் அங்கிருந்த பௌத்த பிக்கு மற்றும் சிங்கள மக்கள் பொலிசார் உட்பட்டவர்களால் இந்துக்களின் பூஜை நிகழ்வுகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?**

பதில் : மத வழிபாட்டிற்காக செல்கின்ற மக்களுக்கு யாரும் தடை விதிக்க முடியாது. பௌத்தர்களாக இருக்கலாம், இந்துக்களாக இருக்கலாம். அவர்களை யாரும் தடுக்க முடியாது. மத ஸ்தானத்திற்கு சென்று ஒருவருக்கு வழிபடும் உரிமை இருக்கிறது. மத கோட்பாடுகளுக்கமைய அவர் அந்த இடத்தை தரிசித்துச் செல்லலாம். மக்கள் வழிபடச் செல்கின்றபோது அதனை தடுப்பது அடிப்படை உரிமைகளை மீறுகின்ற செயலாகும். அரச அதிகாரத்தைக் கொண்டு தடுப்பது உரிமை மீறலாகக் கருதப்படும்.

மேலும் ஒரு விடயம், பிணக்கு சம்பந்தமாக நீதிமன்றம் கட்டளையாக்குகின்றபோது அந்தக் கட்டளைக்கு யாவரும் கீழ் படிதல் வேண்டும். அந்தக் கட்டளையை உரிய அதிகாரிகள் அமுல்படுத்தவேண்டும். அதனை அமுல்படுத்தவேண்டிய பொறுப்பு அரசுக்குள்ளது. எனவே அவர்கள் அந்தப் பொறுப்பினை சரிவரச் செய்து நீதிமன்றத்தின் கட்டளைகளை தீர்ப்புகளை மீறாத வண்ணம் நடந்துகொள்வது சகலருடைய கடப்பாடாகும்.

**கேள்வி : பொலிசார்?**

பதில் : ஆம். பொலிசார் கடைபிடிக்கவேண்டும். தொல்பொருள் திணைக்கள அதிகாரிகள் கடைப்பிடிக்க வேண்டும். சகலரும் அதைக் கடைப்பிடிக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு குருந்தூர் மலை விவகாரம் பேசுபொருளாக மாறிக்கொண்டு போகின்றது. இதில் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் ஒரு முரண்பாடான நிலையைத் தோற்றுவிக்கிற அளவுக்கு இது மாறியுள்ளது. என்னைப்பொறுத்தவரையில் இதனை நிரூபித்துக்காட்டவேண்டியது அரசின் பொறுப்பு. எந்த மதத்தினைப் பின்பற்றுகிறவர்களுக்கு இந்த குருந்தூர் மலைப் பிரதேசம் சொந்தமானது என்பதை அரசு நிரூபித்துக்காட்டவேண்டும்.

இலங்கை போன்ற நாடுகளைப் பொறுத்தவரையில் யுனெஸ்கோ போன்ற அமைப்புகளை நாடி பக்கச்சார்பற்ற நிபுணர்கள் மூலம் இந்த விடயம் நிரூபிக்கப்பட்டு இன்னாருக்குரிய மதச்சின்னம் தான் எனச் சொல்லப்பட்டால் அதனை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஆனால் இலங்கையில் இருக்கின்ற அதிகாரிகள் அதாவது சிங்கள மக்களாக இருக்கலாம். தமிழ் மக்களாக இருக்கலாம் இவர்களுக்குள் இருக்கின்ற நிபுணர்களைக் கொண்டு நிரூபிக்க முற்படுகின்றபோது, அது பக்கச்சார்பான முடிவுகளை எடுப்பதற்கு சாதகமாக அமைந்துவிடும்.

எனவே இதைத் தவிர்க்க வேண்டுமாகவிருந்தால் யுனெஸ்கோ போன்ற அமைப்புக்களை நாடி அங்கிருக்கும் நிபுணர்களைக் கொண்டுதான் இந்தச் சின்னம் எந்த காலப்பகுதிக்குரியது, எந்த மதச் சின்னம் என்பதை நிரூபிக்கவேண்டும். அவ்வாறு நிரூபிக்கப்படுகின்றபோது யாராகவிருந்தாலும் அந்த முடிவுகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

**கேள்வி : கிறிஸ்தவ மக்களும் இதற்குள் தடையாக இருப்பதாக சிவசேனை அமைப்பின் தலைவர் அண்மையில் தெரிவித்திருந்தார். இது குறித்து?**

பதில் : கிறிஸ்தவ மக்கள் இதற்குள் எந்தவிதமான தடையும் விதிக்கவில்லை. அவர்கள் இதற்குள் எந்தவிதமான ஈடுபாட்டையோ, அக்கறையினையோ காட்டவில்லை. அவர்கள் கிறிஸ்தவ மக்கள். அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். அவர்கள் ஏதோவொரு மதத்திற்குச் சார்பாக அங்கு நிற்கிறார்கள் என்கிற குற்றச்சாட்டினை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி : பீற்றர் இளஞ்செழியன் என்பவர் ஒரு கிறிஸ்தவர் எனவும், இந்துக்களின் வழிபாடுகள் குறித்து அறியாத ஒருவர், பொலிசாருடனும், பௌத்த பிக்குகளுடனும் வாக்குவாதப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறதே?**

பதில் : உண்மையில் நல்ல நோக்கம் உள்ளவர்கள் எவரும் இந்த விடயங்களைத் தட்டிக்கேட்கலாம். ஒரு கிறிஸ்தவர் அல்லது பௌத்த மகன் கூட இதனைத் தட்டிக்கேட்கலாம். ஒரு இஸ்லாமியர் கூட உரிமை மீறல்களைத் தட்டிக்கேட்கலாம். இந்த விடயத்தினை சுட்டிக்காட்டுவதற்கான உரிமை அனைவருக்கும் இருக்கிறது. அந்த அடிப்படையில் அவர் அந்த காரியத்தினைச் செய்திருக்கலாம்.

**கேள்வி : முன்னாள் அமைச்சர் பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர, இது ஒரு பௌத்த நாடு. இங்கு நீதியரசர்கள், நீதிபதிகள், சட்டத்தரணிகள் யாராகவிருந்தாலும் அடிபணிந்துதான் பயணிக்கவேண்டும் என்கிற தோரணையில் தெரிவித்த கருத்தானது நாட்டிற்குள் பெரும் அதிர் வலைகளை ஏற்படுத்தியுள்ளது. வடக்கில் கிழக்கில் என சட்டத்துறை சார்ந்தவர்கள் அடையாள போராட்டத்தினையும் செய் திருந்தீர்கள். இவர் தொடர்பான உங்களது கருத்து என்ன?**

பதில் : இது சரத் வீரசேகர என்ற பாராளுமன்ற உறுப்பினரின் கருத்து. இது ஒட்டுமொத்த சிங்கள சமூகத்தின் கருத்து என்று கூற முடியாது. ஒட்டுமொத்த சிங்கள மக்களின் கருத்தா என்பதை கருத்துக்கணிப்பின் மூலமாகவே பெறவேண்டுமே தவிர ஒரு பாராளுமன்ற உறுப்பினரின் கருத்தினை வைத்து நாங்கள் இது ஒட்டுமொத்த சிங்கள மக்களின் முடிவு அல்லது கருத்து என்று கருத முடியாது. அதுவும் அந்தக் கருத்தினை அவர் பாராளுமன்றத்திற்குள் தெரிவித்திருக்கிறார். பாராளுமன்ற சிறப்புரிமை என்ற விடயத்தை அவர் பாவித்து இந்து மக்களை தமிழ் மக்களை புண்படுத்தும் விதமாக அந்தக் கருத்தினை கூறியிருக்கிறார். அவ்வாறு கூறப்பட்ட கருத்து கண்டிக்கத்தக்கது.

இலங்கையில் இருக்கின்ற யாவரும் சட்டத்திற்கு சட்ட ஆட்சிக்கு உட்பட்டவர்கள். நல்லாட்சி நிலவுகின்ற ஒரு நாட்டில் சட்டத்தின் படியான ஆட்சி இருக்கவேண்டும். நீதித்துறை சுதந்திரமாக இருக்கவேண்டும். எனவே எல்லோரும் சட்டத்தின் கீழ் உட்பட்டவர்கள். இங்கே யாருக்கும் சட்டத்தில் விடுபாட்டு உரிமை என்பது கிடையாது. நீதிமன்றங்களும் சட்டத்தை அடிப்படையாகக்கொண்டுதான் கடமையாற்றவேண்டி இருக்கிறது. தீர்ப்புகளையும் வழங்கும். ஒரு வழக்கு நீதிமன்றில் முன்வைக்கப்படுகின்றபோது ஆதாரங்கள், சான்றுகளை வைத்துத்தான் நீதிமன்றங்கள் கட்டளைகள், தீர்ப்புகளை ஆக்கும். எனவே அதற்கு அடிபணியவேண்டியது யாவரினதும் பொறுப்பு. யாரும் சட்டவாட்சியிலிருந்து எனக்கு இது பிடிக்கவில்லை என்று தப்ப முடியாது. எனவே இந்து மதம் தொடர்பாக தமிழ் மக்கள் தொடர்பாக குறித்த பாராளுமன்ற உறுப்பினர் கூறிய கருத்துக்களை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. அதேபோல தமிழ் மக்களாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது.

**கேள்வி : நீதிகள் மறுக்கப்படுகின்றபோது உங்களது அடுத்தகட்ட நகர்வு எவ்வாறு அமையும்?**

பதில் : எங்களைப் பொறுத்தவரையில் சட்டத்தின் படி சட்டவாட்சியின் படி சட்ட நடைமுறைகளின் படி ஒரு விடயத்தை தீர்வுகாண வேண்டும். இன்றைக்கு ஒருவர் சட்டத்தை மீறிய ஒரு செயலை ஆற்றி அதன் மூலம் ஏதாவது ஒரு நன்மையினை அடைந்தாலும் சட்டம் என்றோ ஒருநாள் அவர்களைப் பார்த்துக்கொள்ளும்.

**தொடரும்...**

**நேர்காணல் : இரணியன்**

தினப்புயல்,
ஆசிரியர் பீடம்,
இல:154, 6வது ஒழுங்கை,
தேக்கவத்தை,
வவுனியா.

## ஒற்றுமை இல்லையேல் இருப்பு கேள்விக்குறி

வடகிழக்கின் ஒவ்வொரு அங்குலமும் எந்தநேரத்தில் சிங்கள பேரினவாதிகளின் கைக்குச் செல்லும் என்கிற பயப்பீதியுடன் தான் தமிழ் மக்கள் ஒவ்வொரு நாளையும் கடக்கவேண்டிய கட்டாயச்சூழலுக்குள் நன்கு திட்டமிட்டுத் தள்ளப்பட்டுள்ளனர். கடந்த 30 வருடங்களுக்கு மேலான ஆயுத ரீதியிலானப் போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர். அஹிம்சை ரீதியிலானப் போராட்டங்கள் மாத்திரம் இன்றும் முன்னெடுக்கப்பட்டு வரும் இன்றைய சூழலில். தமிழினம் முன்பை விட தற்போது பாரிய இனவழிப்பொன்றைச் சந்திக்கவேண்டிய நிலையில் உள்ளனர்.

தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்த பிரதேசங்கள் இன்று திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களாலும். தொல்பொருள் திணைக்களத்தின் நடவடிக்கையாலும். பௌத்தபிக்குகளின் என்றுமில்லாதவாறான பிரசன்னாங்களாலும் பறிபோகும் நிலை தொடர்கின்றது.

தமிழ் மக்கள் வழிபாட்டிடங்களைக் குறிவைத்து பௌத்த பிக்குகள் பௌத்த விகாரைகளை அமைத்து பொலிசாரையும் துணைக்கு வைத்துக்கொண்டு. தொல்பொருள் திணைக்கள அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடன் தமிழர் நிலங்களை கபளீகரம் செய்து வருகின்றனர். அண்மைய குருந்தூர் சம்பவம் இவர்கள் உண்மையில் பௌத்த பிக்குகள் தானா? என்கிற கேள்வியை எழுப்பியுள்ளது. எமது வழிபாட்டிடத்தை ஆக்கிரமித்து. நீதிமன்றத்தின் கட்டளைகளை மீறி. பௌத்த விகாரையை இரவோடிரவாக அமைத்து. இன்று எமது வழிபாட்டிடத்திற்கு எம்மைச் செல்லவிடாமல் தடுக்கக்கூடிய அளவிற்கு நிலைமைகள் தலைகீழாக மாறியுள்ளது.

இவ்வாறான அடாவடிச் சம்பவங்களை அரங்கேற்றிக்கொண்டிருக்கும் பௌத்த பிக்குகளையும். துணைபோகும் சிங்கள மக்களையும் தட்டிக்கேட்க இந்த நாட்டின் சட்டமும். பொலிசாரும். பௌத்த பீடங்களும். ஆட்சியாளர்களும் தயாராக இல்லை. மாறாக ஒட்டுமொத்த ஆளும் வர்க்கத்தின் அனுசரணையுடன் தான் தமிழ் மக்களை தமது பூர்வீக நிலங்களில் இருந்து விரட்டியடிக்க துணிந்துள்ளமை நன்கு புலப்படுகிறது.

இதுவொரு பௌத்த நாடு எனக் கூறிக்கொண்டு. இனவாத சிந்தனையின் உச்சக்கட்டமாகவே இதனை நாம் பார்க்கவேண்டியுள்ளது. பௌத்த விகாரையை அமைப்பதற்காக. தமிழ் மக்களது வழிபாட்டிடங்களை அழிக்கவும் இந்த துறவிகள் என்கிற பெயரில் நடமாடித்திரியும் விரோதிகளும் துணைபோகும் குழுக்களும் துணிந்துவிட்டனர். நீதிமன்றங்களை தொடர்ந்தும் இவர்கள் அவமரியாதை செய்து வருகின்றனர். இவ்வாறானவர்களால் தொடர்ந்தும் தமிழ் - சிங்கள மக்களுக்கிடையில் மோதல் போக்கு அதிகரித்து வருகின்றது.

இதற்கிடையில். இருக்கக்கூடிய தமிழ்க் கட்சிகள் இன்னமும் ஒற்றுமை என்கிற ஒரு குடையின் கீழ் வரவில்லை. தமது சுயலாபம். வரட்டு கௌரவத்திற்காக பிரிந்து நிற்கவே விரும்புகின்றனர். இன்னும் சிலர் அரச கைக்கூலிகளாக கூலிக்கு மாரடிக்கும் வேலையினையே செய்து வருகின்றனர். ஒற்றுமை என்கிற ஒரு குடையின் கீழ் தமிழினம் வருவது எப்போது?

# கல்லறைப் பூக்கள்

17



**பல்துறை எழுத்தாளர்**
**புயல் பெ.ஶ்ரீகந்தநேஷன்**

அவரை வவுனியா வைத்தியசாலையில் சேர்த்தும் அவருடைய உயிரைப் பாதுகாக்க முடியவில்லை. கெதியா வா தம்பி வேளைக்குப் போனா 'ஐ.சி.ஆர்.சி' நிக்கும் சூனிய பிரதேசத்தைக் கடக்குறதுக்கு பயமில்லை"

"வீட்டில், மூன்று கிலோ முட்டை மா செய்தது கொண்டு போக, அதை 'பேக்'கில் போட்டு கட்டினனான் 'பேக்' கிழிஞ்சி போச்சி. அதை கட்டிக்கொண்டு வற கொஞ்ச நேரமாச்சு."

"நாட்டில் நடக்கிற எல்லாத்தையும் பார்க்கிறாய்தானே"

"நீங்க சொல்லுறதும் உண்மைதான்" இருவரும் பயணத்தை ஆரம்பித்தனர்.

தந்தை கைகளை அசைத்தார். தங்கையின் கண்கள் குளமாகியது. அவர்களின் பாரர்வையிலிருந்து இருவரும் மறைந்தனர்.

கிடங்கும் பள்ளமுமாய் காட்சியளித்த A9 வீதியால், இருவரினது உரையாடலுடன் மோட்டார் சைக்கிள் 40, 50, 60 கதி வேகத்தில் கூடிக்குறைந்து பயணிக்கின்றது.

"அய்யா ஏன் ஒருவரும் 'கெல் மட்' போடாம 'மோட்டர் சைக்கிளிலை போறீனம்?"

"யாழ்ப்பாணத்திலிருந்து ஏக்கம் எப்ப வன்னிக்கு ஓடிவந்துச்சோ?. அப்பயிலிருந்து இஞ்ச யாரும் 'கெல் மட்' போடுறது இல்லை. அப்படி 'கெல் மட்' போட்டா சண்டைக்கு போற ஆக்கள் என்று நினைப்பாங்க?"

"அய்யா அப்ப ஏன் நீங்க கண்ணாடி இல்லாத கெல் மட்' போட்டிருக்கீங்க"

"யாரு என்ன சொன்னாலும் எங்கட பாதுகாப்ப நாங்கதானே செய்யனும்? அதோட வயசும் போச்சு. எங்கட இனத்தாலையே பாதி மக்கள் செத்து போச்சி. நாம கண்டறியாத சண்டையால வீண பல வழிகளிலை நாளுக்கு நாள் செத்துக் கொண்டிருக்கம்"

"நீங்கள் சொல்லுறதும் சரி. எதிரில் வேகமாக உழவு இயந்திரம் ஒன்று வருது கவனம்"

"இது தம்பி எங்கையும் சண்டை நடந்திருக்கும் எங்கட பொடி பொட்டச்சிகள் காயப்பட்டிருக்குங்கள் இல்லாட்டி வாழ வேண்டிய வயசில் வீட்டில் சண்டைப் போட்டுக்கொண்டு போய் முன் களத்திலிருந்து செத்து போயிருக்குங்கள். அது 'டெக்டர்' போகும்." மோட்டார் சைக்கிளின் வேகத்தைக் குறைத்தார்.

உழவு இயந்திரம் விழுப்புண் அடைந்த ஏக்கக்காரர் பலரையும் வீரச்சாவு அடைந்த பலரையும் பெட்டியில் சுமந்தவாறு மின்னல் சப்தத்தில் தாரா வேகத்தில் அவர்கள் இருவரையும் தாண்டிச் சென்றது.

அவர்களின் பயணம் தொடர்கின்றது. கதையும் விட்ட இடத்திலிருந்து தீ பிடிக்கின்றது.

"அய்யா நீங்க கெல் மட்' போட்டிருக்கிறதால், உங்களை சண்டைக்கு போற ஆளா நினைக்க மாட்டாங்களா?"

"தம்பி எனக்கு அறுபத்தைந்து வயசாச்சி. இப்பவும் மோட்டார் சைக்கிள் 'அயர்' ஓடித்தான் சாப்படுறன். நினைச்சா நினைச்சுட்டுப் போவட்டும். எல்லாத்துக்கும் ஒரு எல்லை வேணும். இவங்கள் அறுபது வயதுக்கு மேற்பட் ஆக்களை எல்லாம் 'றெயினிங்' கொடுத்து 'ஏக்கே' வோட எல்லைப்படைக்கு அனுப்பினாங்களோ அப்பவே எங்கட மக்களில் பல பேர் 'கெல்மட்' போடாம தலையில் வெடிபட்டும், 'பீஸ்' பட்டும் அநியாயமாகச் சாவ தொடங்கிற்றாங்க." - வரலாற்றுப் புராணத்தை இழுத்துக்கொண்டே இயக்கத்தின் சோதனைச் சாவடியைத் தாண்டி சூனியப் பிரதேசத்துக்குள் மோட்டார் சைக்கிளின் முன் சில்லு நெருப்புக்குள் பாய்வது போல மெதுவாக உருண்டு வருகின்றது.

வீதியில் இராணுவத்தின் சோதனைச் சாவடியை நோக்கி, வரிசை வரிசையாக முனியப்பர் ஆலயத்திற்கு செல்லும் கிடாக்கள் போல, அங்கு செல்பவர்களின் அனைவரது கண்களிலும் மரணப் பயம் பூத்திருந்தது.



மக்கள் சூனிய பிரசேத்தில் பயணிக்கும் போது, கனரக வாகனங்கள் செல்லத் தடை. மக்கள் அனைவரும் தாங்கள் வந்த சிறிய வகை வாகனங்களை வாகனத் தரிப்பிடங்களில் நிறுத்திவிட்டு, தாம் கொண்டு வந்த உடைமைகளை ஓர் இடத்தில் வைத்துவிட்டு, இரண்டு கைகளையும் உயர்த்தியவாறு தேசிய அடையாள அட்டையை வலக்கையில் பிடித்து அசைத்தவாறு இருநூறு மீற்றர் தூரம் நடந்து இராணுவச் சோதனைச் சாவடியை அனைவரும் வந்து சேருவார்கள். 'போக்கி' மூலம் சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினரும் இராணுவத்தினரும் இடைக்கிடையே குடிகாரனும் பிச்சைக்காரனும் வாந்தி எடுப்பது போல் உரையாடுவார்கள். அதற்கு இடையில் இயக்கக்காரரும் இடைக்கே புகுந்து கதைப்பார்கள்.

ஆண்கள் வேறு வரிசையிலும் பெண்கள் வேறு வரிசையிலும் நான்கு பக்கங்களும் இறப்பர் சீட்டுக்களினாலும் சாக்குகளினாலும் மறைத்துக் கட்டப்பட்ட ஒரு கூடாரத்திற்குள் செல்வார்கள். ஒவ்வொருவரையும் கழுத்துப் பகுதியிலிருந்து பாதம் வரை கையுறைகள் அணிந்த கரங்கள் தடவும். எதிரில் கோழிக்குஞ்சைத் தூக்குவதற்கு ஆயத்தமாக நிற்கும் வல்லூறுகள் மாதிரி அடிவருடிகளான தலையாட்டிகள் முகத்தைக் கறுப்பு துணிகளினால், முடியவாறு 'பவல்' வாகனங்களில் தலையாட்டுவதற்கு ஆயத்தமாக நிற்பார்கள் மக்கள் கண்டும் காணாததைப் போல செல்வார்கள்.

இருந்தும் அப்பாவி மக்கள் சிலருக்கு வல்லூறு பார்வை விழுந்து விடும். பார்வை விழுந்தவர் சில நேரம் உடனே திரும்புவர்" சிலர் சில காலத்தில் திரும்புவர்" சிலர் திரும்பவே மாட்டார்கள். சிலர் காணாமல் போய்விடுவார்கள்' சிலர் பிணமாக வீதியில் கிடப்பார்கள். இவையெல்லாம் வழமை.

சாத் கூடாரத்திற்குள் செல்லும் நேரம் வந்துவிட்டது. ஆமை வேகத்தில் வந்தவன் சற்று வேகத்தைக் கூட்டி உள்ளே செல்கிறான்

"நம மொக்கத" - உடல் பருத்த இராணுவ வீரன், சாத்தின் மேனியை இரு கரங்களினாலும் தடவியவாறு வார்த்தைகளை வீசினான்.

சாத்துக்கு சிங்கள மொழியில் ஒரு வார்த்தைக் கூட தெரியாது. அன்றுதான் முதற் தடவையாக ஶ்ரீலங்கா இராணுவத்தை நேரில் காணுகின்றான். தடுமாற்றமும் நடுக்கமும் அவனை விட்டு நீங்கவில்லை. மெதுவாக அடையாள அட்டையை நீட்டுகின்றான். அடையாள அட்டையை வாங்கிய இராணுவ வீரன், "சம்பூரண நம கனகர் சாத், கொய்த இந்தலாவ ஆவா?" - விடையும் கேள்வியும் அவனே கேட்டு பதிலும் சொன்னான்.

"எனக்கு சிங்களம் தெரியாது." - சாத் சுத்தத் தமிழில் ஒரு வாக்கியத்தை மெல்ல வீசினான்.

"சரி...சரி... எங்கயிருந்து வாறது"

"மாங்குளத்தில்"

"பிறந்தது யாப்பாணைய பதிஞ்சிய மாங்குளம்"

"ஓ... ஓ... சேர்.."

"நீங்க LTTE சப்போட்டா. அவங்கள பாத்திருக்கீங்களா?"

"இல்லை சேர். றோட்டில் AKயுடன் நிப்பாங்க சேர் அப்ப பாத்திருக்கன்"

"அடோ AK என்று நமயெல்லாம் தெரியுமா உங்களுக்கு?"

"வன்னியில் சின்ன பிள்ளைக்கும் தெரியும் சேர்"

"What?"

"பிள்ளைகளிண்ட விளையாட்டு 'திங்ஸ்'களே இந்த வெடிச்ச ஷெல் துண்டுகளும் உடஞ்சு பழுதாகிய துவக்குகளுந்தான்"

"சரி சரி நீங்க 'கெம்பஸ்ஸூக்குப் படிக்கப் போறதால், உங்கள பதிஞ்சிட்டு விடுகிறன். 'Gun' பெயரெல்லாம் சொல்லுறதாலே கொழும்பில் நாலாம் மாடிக்குப் போக வேண்டி வரும். யாப்பாண போனாலும் ஆமி 'சீயம' அங்க வந்தும் உங்கள விசாரிப்பாங்க கவனம். அப்படியே 'துறுவாக' நடந்து போய் மெத்தன 'சீடிபி பஸ்' தியனவா யண்ட"

"என்ர 'பெக்' சேர்"

" 'பெக்' எல்லாம் 'செக்' பண்ணிட்டு, உங்கட பின் 'பஸ்ஸில்' வரும். ஓடிப் போடா"

பேருந்து, சாத்தின் வருகைக்குக் காத்திருந்தது போல, அவன் ஏறியதும் பின்னால், மக்களின் பொதிகளைச் சுமந்தவாறு புறப்படுவதற்கு ஆயத்தமாக நின்ற 'மினிபஸ்' மேல் 'புக்கு புக்கு' என புகையைக் கக்கிப் புறப்பட்டது. புளி மூட்டை போல் அடுக்கப்பட்ட மக்கள் பேருந்தின் உள்ளே புழு மாதிரி நெளிந்தனர். பேருந்தின் முன் வாசல் ஓரம் கம்பியைப் பிடித்தவாறு நின்ற சாத் பேருந்து கண்ணாடிகளின் மூலம் வெளிச் சூழலைப் பார்க்க பார்வையைச் செலுத்தினான்.

சுற்றி துணியால் அடைக்கப்பட்ட கண்ணாடிகளினூடாக அவனது பார்வை வெளிச் செல்லவில்லை. அந்த துணியை விலத்தி விட்டு பார்ப்பதற்கும் அனுமதி கிடையாது. ஒரு பேருந்தின் இரு வாசல்களிலும் ஆயுதங்களுடன் சீருடையினர் கள்ளர்களைப் பாதுகாப்பது போல் பேருந்தின் உள்ளே இருக்கும் மக்கள் மீது வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

'Gun' பெயரெல்லாம் சொல்லுறதாலே கொழும்பில் நாலாம் மாடிக்குப் போக வேண்டி வரும்.' என்ற வசனத்தை யோசிக்கும் போது சாத்தைச் சற்று தயக்கம் கொள்ள வைத்தது. ஊரில் பெரியோர்கள் சொல்ல கேள்விப்பட்டிருக்கான் நாலாம் மாடிக்குப் போனால், ஒன்று சாக வேண்டியதுதான், இல்லாட்டி காணாமப் போக வேண்டியதுதான், இல்லாட்டி ஆயுள் முழுவதும் செயற்படாதவகையில் உடல் ஊனம் உற்று வாழ வேண்டியதுதான், இல்லாவிடில் வெளிய வந்து வேற வருத்தத்தால் சாக வேண்டியதுதான் என்று.

"தம்பி சாத் கவலைபடாதை. உனக்கு ஒன்றும் நடக்க, அம்மா விடமாட்டேன்"

"இல்லை, அம்மா எனக்கு பயமாக இருக்கு"

"அப்பு ராசா அம்மாட ஆசையை நிறைவேற்றி வை"

"சும்மா போவம்மா. 'கெம்மஸ்'சுக்குப் போன பிறகு அங்கையும் 'றக்கிங்' தொல்லையும் ஆமிண்ட ஆக்கினையும் தொடரும் போல"

"அதெல்லாம் போகப் போக சரியாகி விடும்"

"இல்லையம்மா... என்னால், முடியாது"

"தம்பி, நாங்க வாழ்க்கை என்ற விளையாட்டுத்திடலில் தொடர்ச்சியாக விளையாடினால்தான், உடலும் உள்ளமும் உறுதி பெறும். இயற்கை எங்களுக்குக் கொடுத்த விபத்து என்ற கூடலினால் இந்த உலகத்தில் அவதரித்தோம். மரணம் என்ற வெற்றியை விளையாட்டு வீரர்களுடன் விளையாடிதான் பெறவேண்டும் அதுதான் உலக நியதி.

வாழ்க்கை ஒரு போராட்டம் என்று சில பேர் சொல்லுவாங்க. அது மற்றவர்களைத் துன்புறுத்திக் கொடுமைப் படுத்துபவர்களின் கருத்து. நீ வாழ்வை பகிடியாக எடுக்காமல் விளையாட்டாக எடுத்து விளையாடிப் பார்.

தொடரும்...

# குருந்தூர் மலையில் பௌத்த ஆக்கிரமிப்பு, பக்தர்கள் மீது தாக்குதல் - நடந்தது என்ன?



இலங்கையின் இன்றைய சமகால அரசியலானது இனவாத மதவாத தேசியவாதங்களை முன்வைத்தே முன்னெடுக்கப்பட்டு வருவதைக் காணக் கூடியதாகவிருக்கின்றது. அதிலும் குறிப்பாக கடந்த 14ஆம் திகதி வழிபாட்டிற்காகச் சென்ற பக்த அடியார்கள் பௌத்த பிக்குகளாலும் அங்கிருந்த சிங்களத் தரப்பினராலும் தடுத்து நிறுத்தப்பட்டனர். தமிழ் மக்கள் குருந்தூர் மலையிலுள்ள தமது வழிபாட்டிடத்திற்குச் சென்று பொங்கல் வைத்து வழிபட அனுமதி இவர்களால் வழங்கப்படவில்லை. குருந்தூர் மலை ஆதி சிவன் ஐயனார் ஆலயம் என்பது சைவ மக்களின் வழிபாட்டிடம். தமிழ் மக்கள் செறிந்து வாழ்ந்த இடம். யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இரவோடிரவாக குருந்தூர் மலையில் விகாரையைக் கட்ட திட்டமிட்டு செயற்பட்ட தரப்பினரால் இன்று இரு இனங்களுக்கிடையில் முறுகல் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

வடகிழக்கில் தமிழ் மக்களின் பூர்வீக இடங்கள் திட்டமிட்டு சிங்களவர்களால் ஆக்கிரமிக்கப்படுவது என்பது இன்று நடப்பவை அல்ல. மாறி மாறி இலங்கையை ஆட்சி செய்து வந்த அரசுகள் காலங்காலமாக இதனையே நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதுவொரு பௌத்த நாடு என்று கூறிக்கொண்டு தமிழ் மற்றும் முஸ்லீம் மக்கள் வாழ்கின்ற பிரதேசங்கள் பௌத்த பிக்குகளைக் கொண்டு கைப்பற்றும் நோக்கிலும், தொல்பொருள் திணைக்களம் என்கிற பெயரில் நிலங்களை அபகரிப்பதையும் வழக்கமாக்கிக் கொண்டுள்ளனர்.

இன்று குருந்தூர் மலையில் பௌத்த விகாரையொன்று கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இவ்விகாரை புராதன விகாரையல்ல. வரலாறுகளைப் பார்த்தால் அறிந்துகொள்ள முடியும். அத்துமீறி தமிழ் மக்கள் செறிந்து வாழ்கின்ற பகுதியில் இவ்வாறான விகாரையை அமைத்தது என்பது விரோதமான செயலாகும். இவ்விகாரை அமைக்கப்படுகின்றபோது தமிழ் அரசியல்வாதிகள் மற்றும் தமிழ் மக்களால் ஆர்ப்பாட்டங்கள் மேற்கொள்ளப்பட்டது. இன்றுவரை இவ் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டே வருகின்றது. ஆனால் தீர்வு வந்தபாடில்லை. நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு நீதிமன்றத்தால் குறித்த விகாரையின் கட்டுமானங்கள் தொடர்பில் கட்டளைகள் வழங்கப்பட்டபோதும் குறித்த விகாரையின் தலைமைப் பிக்குவும் அவரின் சகாக்களும் நீதிமன்றக் கட்டளைகளை அவமதித்தே வருகின்றனர். கட்டளைகளை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிசார் பௌத்த பிக்குவுக்குச் சார்பாக செயற்படுகின்றனர். நீதிமன்றத்தை அவமதித்துவரும் குறித்த தேரர் மற்றும் சட்டத்தை நடைமுறைப்படுத்தத் துணியாத பொலிசாருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்படவேண்டும். குறித்த விகாரைக்கென கல்வெட்டுக்கள் கூட வைக்கப்பட்டுள்ளன. நிலைமைகள் இன்று தலைகீழாக மாறியுள்ளன.

ஏற்கனவே அங்கு வைக்கப்பட்டிருந்த ஐயனார் ஆலயத்தின் சூழம் ஏனைய வழிபாட்டுப் பொருட்கள் அனைத்தும் உடைக்கப்பட்டது. அங்கு தமிழ் மக்கள் வரக்கூடாது. பூஜை வழிபாடுகளில் ஈடுபடக்கூடாது என குறித்த சிங்களவர்கள் அடாத்தாக செயற்பட்டு வருகின்றனர். உண்மையில் இது தமிழ் மக்களுக்குச் சொந்தமான நிலப்பரப்பாகும். இந்த நிலப்பரப்பை மீண்டும் தமிழ் மக்கள் கைப்பற்றவேண்டிய சூழலுக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்.

கடந்த 14ஆம் திகதி ஏராளமான பௌத்த பிக்குகள், சிங்கள மக்கள், பொலிசார், விசேட அதிரடிப்படையினர் என ஏராளமானோர் திரண்டு தமிழ் மக்களின் பொங்கல் நிகழ்வைத் தடுக்கும் நோக்கில் குருந்தூர் மலையில் குவிக்கப்பட்டிருந்தனர். ஆனால் தமிழ்த் தரப்பைப் பொறுத்தவரையில் நூறு பேருக்கும் உட்பட்டவர்கள் தான் அந்த இடத்தில் இருந்தார்கள். குருந்தூர் மலையை அண்டிய பிரதேசத்திலுள்ள மக்கள் ஒன்றுதிரண்டு ஐயனார் ஆலயத்திற்குச் செல்லவேண்டும். அப்போதுதான் குருந்தூர் மலையைத் தக்கவைக்க முடியும். இல்லையேல் முற்றுமுழுதாக குருந்தூர் மலை அபகரிக்கப்படக்கூடும்.

எமது ஆலயங்களை அடித்து நொறுக்கி தூக்கி வீசுகின்றனர். நீதிமன்றத்தை நாடினால் பௌத்த பிக்குகள் நீதித்துறையை மதிப்பதில்லை. அவமதிப்பு செய்கின்றனர். பொதுமன்னிப்பும் வழங்க நாட்டின் ஜனாதிபதி தயாராக இருக்கின்றார். தமிழ் மக்களாகிய நாம் எமது பிரதேசங்களில் அத்துமீறிக் கட்டப்பட்டுள்ள அல்லது கட்டப்பட்டுக்கொண்டிருக்கும் விகாரைகளை அடித்துநொறுக்க எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை இந்த அடாவடி சிங்கள பௌத்த தேரர்களும் அவர்களுக்குத் துணைபுரியும் மக்களும் எண்ணிப்பார்க்கவேண்டும். ஆனால் இவர்களைப் போல தமிழ் மக்கள் மூர்க்கத்தனமாக நடந்துகொள்ளப் போவதில்லை. ஆதலால் தான் தமிழ் மக்களிடமிருந்து நாளுக்கு நாள் நிலம் பறிபோய்க்கொண்டேயிருக்கிறது.

தமிழ்க் கட்சிகளிடையே ஒற்றுமை சிதைவடைந்துள்ளது. கட்சி பேதங்களும் சுயலாப சிந்தனைகளும் மேலோங்கி ஒற்றுமையை சீர்குலைத்துள்ளது. அனைத்து தமிழ்க் கட்சிகளும் ஓரணியில் திகழுவார்களாகவிருந்தால் மாற்றங்களை நாமும் ஏற்படுத்த இயலும். ஆர்ப்பாட்டங்களுக்குள் சிங்களக் காடையர்கள் திட்டமிட்டு உட்புகுத்தப்படுகிறார்கள். சிங்களவர்களுக்கு ஒரு சட்டமும் தமிழர்களுக்கு இன்னொரு சட்டமும் இந்த நாட்டில் நடைமுறைப்படுத்தப்படுகிறது. சட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய பொலிசார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கின்றனர். நான் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று பார்த்ததன் பின்னரே இவ்வாறான விடயங்களை எழுதுகிறேன். சுமார் மூன்று, நான்கு வருடங்களுக்கு முன்னர் இவ்வாறான எந்தவிதமான பௌத்த விகாரையும் அங்கு காணப்படவில்லை. தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கிற போர்வையில் இந்த மலைக்குள் உள்நுழைந்த தரப்பினரின் துணையுடன் கொவிட் காலத்தை சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர் என்பதே உண்மையாகும்.

குருந்தூர் மலையானது இன்று தொல்பொருள் ஆராய்ச்சியில் உள்ள பிரதேசம். அங்கு தமிழ் மக்கள் மாத்திரம் செல்லக்கூடாது. கட்டுமானங்களைக் கட்டக்கூடாது என பௌத்த பிக்குகளை வைத்தும், தொல்பொருள் திணைக்களத்தைக் கொண்டும் சிங்கள பேரினவாத அரசு பின்னணியில் செயற்பட்டு வருகின்றது. மத்திய அரசின் கீழ் உள்ள ஏனைய நிறுவனங்கள் இந்த விடயத்தில் சிங்களவர்களை மீறி எதனையும் செய்ய முடியாத நிலை உருவாகியுள்ளது. பௌத்த பீடம் இவ்விடயத்தில் தலையிட்டுள்ள காரணத்தால் பொலிசார் வாய்மூடி அடங்கியுள்ளதைக் காண முடிகிறது. தமிழ் மக்களுக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கப்பட்டே வருகின்றது. தெற்கில் வலுப்பெற்று ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த காரணமாகவிருந்த "அரகல" என்கிற மக்கள் போராட்டம் போல, நாமும் எமக்கு நடக்கும் அநீதிக்காக வலுவான போராட்டங்களை முன்னெடுக்கவேண்டும். அதன் மூலமாக மாற்றங்களைக் கொண்டுவர முடியும். இந்த அரசாங்கமும் இன்று வடக்கில் கிழக்கில் அரசுடன் ஒட்டிக்கொண்டு பயணிக்கும் தமிழ்த் தரப்பும் தமிழ் மக்களால் விரட்டியடிக்கப்படவேண்டும். அவர்கள் சிங்கள பேரினவாதிகளின் கைக்கூலிகளாக செயற்பட்டு தமிழினத்தின் இருப்பை சிதைத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

இதனைப் புரிந்துகொண்டு தமிழ் மக்களை விரட்டியடிக்க சிங்களவர்கள் துணிந்துவிட்டார்கள். தமக்குச் சாதகமாக இன்று அனைத்தையும் மாற்றியுள்ளார்கள் சிங்களத் தரப்பினர். குருந்தூர் மலையினைப் பார்க்கின்றபோது மிகக் கவலையாக இருக்கிறது. ஊடகவியலாளர்களாக நாம் அங்கு சென்றிருந்தபோதும் எதனையும் கதைக்கும் அளவிற்கு நிலைமைகள் இல்லை. எனினும் ஊடகங்களில் இவ்வாறான விடயங்களை வெளிக்கொண்டுவர எம்மால் இயலும்.

வன்னிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் இவ்விடயத்தில் தயக்கம் காட்டி வருகின்றனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச சபை, மாகாண சபை என ஏராளமானோர் இருந்தும் அங்கு ஒற்றுமையுடன் சென்று எமக்கான தீர்வைப் பெற முன்வருபவர்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கிறது. ஒவ்வொருவரும் தமது பிரதேசங்களை மாத்திரம் பார்க்கின்றனர். அங்கு மாத்திரம் விஜயம் செய்கின்றனர். அபிவிருத்தி வேலைகளைச் செய்கின்றனர். சைவ சமய மக்களின் வழிபாட்டுப் பிரச்சினையைப் பற்றி ஆலயம் பறிபோவதைப் பற்றி கதைக்க அனைவரும் ஒன்றுதிரள மறுக்கின்றனர்.

ஆகவே இந்த குருந்தூர் மலையினை மீட்டெடுக்க அடுத்த கட்டம் என்ன செய்யவேண்டும் என்பது பற்றி அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரும் ஒன்றிணைந்து கட்சி பேதமின்றி தெளிவான சரியான திட்டமிடல்களைச் செய்து செயற்படவேண்டும். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் குறித்த இடத்திற்கு வருகை தந்திருந்தார். அரச பயங்கரவாதிகளால் அண்மையில் திட்டமிட்டு தாக்கப்பட்ட குறித்த பாராளுமன்ற உறுப்பினர் தமிழ் மக்கள் விடயத்தில் துணிவாக உறுதியுடன் செயற்படுவது வரவேற்கத்தக்கது. பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கூட இந்த குருந்தூர் மலை விடயத்தில் தீவிரமாகச் செயற்பட்டுவரும் ஒருவர். முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் அவர்கள் தனது செயற்பாட்டை இந்த விடயத்தில் தீவிரப்படுத்தியுள்ளார். அன்றைய தினம் அவரும் சிங்களவர்களால் தாக்கப்பட்டார். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள் கூட இவ்விடயத்தில் துணிவாகச் செயற்பட்டு வருகின்றனர். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவமோகன் அவர்களும் தனது பங்களிப்பை தொடர்ந்தும் வழங்கி வருகின்றார். எனினும் ஒற்றுமை என்பது இவ்விடயத்தில் மாத்திரமல்ல தமிழ் மக்களுக்கு எப்போதும் அவசியமாகிறது என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்.

அன்றைய தினம் சைவ மக்களின் பூஜைப் பொருட்களை பொலிசார் காலால் மிதித்த சம்பவமும் நடந்தேறியது. காணொளிகளில் காணக்கூடியதாகவிருந்தது. சிங்களத் தரப்பினரும் அன்றைய சம்பவத்தில் அடாவடித்தனமாக நடந்து கொள்கின்றனர். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசு, இவ்விடயத்தில் நியாயமாக நடந்துகொள்ளவேண்டும். தமிழ் மக்களின் வழிபாட்டிடத்தை ஆக்கிரமிப்பதை நிறுத்தவேண்டும். பௌத்த பிக்குகளின் பிரசன்னத்தை வடக்கு கிழக்கில் நிறுத்தவேண்டும். விகாரைகளை விரிவுபடுத்துவதை நிறுத்தவேண்டும். சட்டத்துறையை மதிக்கவேண்டும். நீதிபதிகளை, சட்டத்தரணிகளை அவமதிக்கும் யாராகவிருந்தாலும் சட்டத்தின் முன் நிறுத்தப்படவேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர போன்றோரை உடனடியாக தண்டிக்கவேண்டும். இனவாதம் பேசிப் பேசி அரசியலை நகர்த்தும் இவர் போன்றவர்கள் பாராளுமன்றில் உட்பிரவேசித்திருப்பது நாட்டிற்கு உகந்ததல்ல. இன்று தெற்கின் சிங்கள மக்கள் உங்களைப் பற்றி நன்கு அறிவார்கள். அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளார்கள். நீங்கள் தமிழ் மக்களுக்குச் செய்த கொடூரங்களை, தொடர்ந்து செய்துவரும் அநீதிகளை அவர்கள் நன்கு அறிவார்கள்.

குருந்தூர் மலை தமிழர்களின் பிரதேசம். தமிழர்களின் பூர்வீகச் சொத்து. அதனை யாரிடமும் பறிகொடுக்க அல்லது யாரேனும் திட்டமிட்டு அபகரிக்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்கப்போவதில்லை. இவ்விடயத்தில் தமிழ் மக்களாகிய நாம் உறுதியாகவிருந்து அஹிம்சை ரீதியானப் போராட்டங்களின் மூலமாக அடுத்தகட்ட தீர்வினை நோக்கி நகரவேண்டும்.

வடக்கு மற்றும் கிழக்கில் இருக்கக்கூடிய ஆதினங்கள் எத்தனை?, அன்றைய தினம் வேலன் சுவாமியைத் தவிர வேறு எவரும் வரவில்லை என்பது வேதனைக்குரிய விடயம். சைவ சமய மக்களுக்கு அல்லது சைவ ஆலயங்களுக்கு ஒரு தீங்கு வருகின்றபோது நீங்கள் முன்வரவேண்டும். எமது ஆலயங்களை சைவ சமயத்தைக் காக்கவேண்டும். தமிழ்த் தரப்பும், சைவ சமய ஆதினங்களும், அரசியல்வாதிகளும் திரண்டு வராததால் தான், குருந்தூர் மலையில் பிக்குகள் மற்றும் சிங்களவர்களின் ஆதிக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. நாம் அணிதிரண்டால் எமக்கான வழிபாட்டினை அங்கு செய்துவர இயலும். மீண்டும் மீண்டும் தவறு செய்யாது ஒற்றுமைப்படுவோம். அப்போதுதான் எமக்கானவற்றை எம்மால் இலகுவாக வெற்றி பெற முடியும் என்பதே உண்மை.

**இரணியன்**

# வடகிழக்கு இணைந்த காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் இல்லையென்றால், போராடுவதைத் தவிர வேறு வழியில்லை




வடகிழக்கில் இருக்கக்கூடிய அரசியல் தலைவர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் சந்தித்திருக்கின்றார். வடகிழக்கு இணைந்த தமிழர் தாயகத்திலே பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் தவிர்ந்த ஏனைய அதிகாரங்களைத் தருவதாக கூறியிருக்கின்ற விடயம், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ போல அல்ல தன்னுடைய செயற்பாடுகள் என்கிற கருத்துப்பட ஜனாதிபதி குறித்த சந்திப்பில் தெரிவித்திருக்கின்றார்.

இதுவரை காலமும் இடம்பெற்ற ஈழ விடுதலைக்கான போராட்டம், தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டமானது. வடகிழக்கு இணைந்த பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் உட்பட்ட தமிழ் மக்களுக்கான ஒரு தீர்வுத்திட்டமாகத்தான் இதுவரை காலமும் பேசப்பட்டு வந்தது. இதில் தமிழ்த் தலைவர்கள் பலரும் பல்வேறுவிதமான கருத்துக்களைத் தெரிவித்தாலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வியாழேந்திரன், பிள்ளையான் போன்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் அரச சார்பானவர்களாக மௌனிகளாக இந்தக் கூட்டத்தில் அமர்ந்திருந்தனர். அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களைப் பொறுத்தவரையில் அவர் காலங்காலமாக மாறி மாறி ஆட்சிக்கு வரும் அரசுகளுடன் மிகவும் நெருக்கமாக இருக்கக்கூடிய ஒருவராக அறியப்படுகிறவர். அதன் பொருட்டுத்தான் அவருக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட்டும் வருகிறது. ஆகவே அவர் அரசின் நிலைப்பாட்டுக்கு தலைசாய்ப்பவர். வியாழேந்திரன் மற்றும் பிள்ளையான் போன்றோரும் அரசின் நிகழ்ச்சிநிரலுக்கமையவே செயற்படுகின்றனர். இவ்வாறான பாராளுமன்ற உறுப்பினர்கள் தமிழ் மக்களை எவ்வாறு வழிநடத்தப்போகின்றனர் என்கிற கேள்வி எழாமலில்லை.

சுதந்திரக் கட்சியின் அங்கஜன் இராமநாதன் அவர்களும் குறித்த சந்திப்பில் கலந்துகொண்டிருந்தார். அவரும் சிங்களத் தரப்பினர் சார்பான ஒருவராகவே அறியப்படுகின்றார். அதேபோல பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் அவர்களும் ஈ.பி.டி.பி கட்சி சார்ந்த ஒருவர். ஆளுந்தரப்பினர்.

வடகிழக்கு இணைப்பிலே மீண்டும் குரோதங்களை உருவாக்க முற்படும் சிங்களத் தரப்பினர், அவர்களுக்குத் துணைபோகும் தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெளிவாக மக்கள் முன் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் ஏனைய தமிழ்க் கட்சிகள் இந்த ஜனாதிபதியுடனான சந்திப்பு தொடர்பில் அதிருப்தியே அடைந்துள்ளனர். 13வது திருத்தச்சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும் என்பதில் தமிழ்க் கட்சிகள் உறுதியாக இருக்கின்றார்கள். இதனை ஜனாதிபதியிடமும் அவர்கள் இணைந்து வலியுறுத்தியிருக்கின்றார்கள்.

இந்த 13வது திருத்தச் சட்டத்தில் இருக்கின்ற பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்கள் மிகவும் முக்கியமானவை. இதில் காணி அதிகாரத்தினைப் பார்க்கின்றபோது, தொல்பொருள் ஆராய்ச்சிகள் என்கின்ற போர்வையில் தமிழ் மக்களது நிலங்கள் அபகரிக்கப்படுகின்றன. மாகாணங்களுக்குரிய காணி அதிகாரத்தினை 13வது திருத்தத்தின் ஊடாக வழங்குகின்றபோது, தெற்கின் நிகழ்ச்சிநிரலை வடகிழக்கில் நடைமுறைப்படுத்த முடியாது என்பது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்கு தெரியும்.

அதாவது காணி அபகரிப்பு, பௌத்த விகாரைகளுக்கான காணியை கையகப்படுத்துவதில் பிரச்சினைகள் எழும். காணிக்கான அனுமதி வழங்குவதில் பிரச்சினைகள் உருவாகும். பொலிசார் மற்றும் கடற்படை தமக்கான காணிகளை வடகிழக்கில் பாரியளவில் கையகப்படுத்தி வைத்துள்ளார்கள். எனவே இக்காணிகள் தொடர்பில் பிரச்சினைகள் எழும். இவ்வாறான விடயங்களுக்கு எதிர்காலத்தில் பிரச்சினைகள் வரும் என்கிற காரணத்தினால் தான் இந்த 13வது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த சிங்கள அரசுகள் பின்நிற்கின்றன. இந்தக் காணி அதிகாரம் மத்தியின் கைகளில் இருந்தால் தான் அவர்களால் வடக்கு மற்றும் கிழக்கில் விகாரைகளை அமைத்து அவை தமது புராதன பூமி என்று வரலாற்றைத் திரிபுபடுத்திக் கூறமுடியும். பௌத்த விகாரைகளை மேலும் விரிவுபடுத்த முடியும்.

காணி அதிகாரம் மாகாண சபைகளின் கைகளுக்குச் செல்கின்றபோது மத்திய அரசால் மாகாணங்களின் அதிகாரத்திற்குட்பட்ட காணிகளில் செல்வாக்குச் செலுத்துவதில் முறுகல் நிலை ஏற்படும். இதனை நன்கு அறிந்துகொண்டே இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் 13வது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்பட்டாலும் அதிலுள்ள காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை மாகாணங்களுக்கு வழங்க ஒருபோதும் இணங்கமாட்டார். அவர் இராஜதந்திர ரீதியில் நரித்தனமாக செயற்படக்கூடிய ஒருவர் என்பது அனைவருக்கும் தெரிந்தவிடயம். பாலைவன நரி என சதாம் ஹூசைனைக் கூறுவதைப்போன்று, இலங்கையில் நரித்தனமான செயற்பாடுகளுக்கு உதாரணமாக ரணில் விக்கிரமசிங்க அவர்களையே கூறுவர். மரத்தினை உள்ளால் அறுத்து அந்த மரத்தை சிதைவடையச் செய்யக்கூடிய ஒருவராகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயற்பாடுகள் அமையப்பெறுகின்றன. அதாவது, வெளியில் பார்ப்பதற்கு மரம், மரம் போலத் தெரிந்தாலும், உள்ளுக்குள் அந்த மரம் அழிவுப்பாதை நோக்கிப் பயணித்திருக்கும்.

போனஸ் ஆசனம் ஒன்றின் மூலமாக ஒரு வருடத்தின் பின்னர் பாராளுமன்றத்திற்குள் பிரவேசித்த ரணில் விக்கிரமசிங்க அவர்கள், பின்னர் பிரதமராகி, தற்போது நாட்டின் உயர் பதவியான ஜனாதிபதியாகவும் சிம்மாசனத்தில் அமர்ந்திருக்கின்றார். உடைந்து போன யுஎன்பி கட்சியை மீண்டும் தூசுதட்டி உயிர் கொடுத்திருக்கிறார் இன்றைய ஜனாதிபதி.

காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்கள் அற்ற 13வது திருத்தச்சட்டம் மாகாண சபைகளுக்கு எதற்கு?. முழுமையாக 13வது திருத்தச்சட்டத்தில் கூறப்பட்டுள்ள அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட வேண்டும் என்பதுதான் தமிழ் மக்களது கோரிக்கை. இவ்விரு அதிகாரங்களை வைத்துத்தான் இன்றளவிலும் தமிழ் மக்கள் மீது அடக்குமுறைகள் பிரயோகிக்கப்படுகின்றது, வன்முறைகள் கட்டவிழ்த்துவிடப்பட்டுகின்றது, நிலங்கள் பறிக்கப்படுகின்றன.

இன்று வடக்கில் பல இடங்கள் சிங்கள மயமாக்கலுக்குள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. இது இரு இனங்களுக்கிடையில் தொடர்ந்தும் முறுகல் நிலையினையே ஏற்படுத்தும். வெடுக்குநாறி மலை மற்றும் குருந்தூர் மலையினை முழுமையாகக் கைப்பற்றும் நோக்கில் பௌத்த தேரர்களும், சில சிங்கள மக்களும் களமிறங்கியிருக்கின்றனர். இன்று காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க முடியாது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் தெட்டத்தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

அவ்வாறெனில், தமிழ் மக்களாகிய நாம், தமிழ் அரசியல்வாதிகள் இனி என்ன செய்யப்போகின்றோம். அரசுடன் பங்காளிகளாக கைகோர்த்திருக்கும் அனைத்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களும் மற்றும் முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள் என அனைவரும் அரசை விட்டு வெளியேறுங்கள். இனியாவது தமிழ் மக்களுடன் கைகோர்க்க ஒன்றிணையுங்கள். அரசில் இருந்துகொண்டு அரசின் அநியாயங்களை உங்களால் தட்டிக்கேட்டு, தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வுகளை பெற்றுக்கொடுக்க முடியுமா? எனச் சிந்தித்துப் பாருங்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளால் உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மீண்டும் பலப்படுத்தப்படவேண்டும். கடந்த காலங்களில் 22 பாராளுமன்ற உறுப்பினர்களை உருவாக்கியதைப்போன்று மீண்டும் அதே நிலைமை உருவாக்கப்பட வேண்டும். தமிழ் மக்களாகிய நாம் அரசியல் ரீதியாக பாரிய சக்தியாக எதிர்காலங்களில் உருவாக வேண்டும். அப்போதுதான் நாம் எமக்கான அஹிம்சைப் போராட்டங்களை பலமாக முன்னெடுக்க முடியும். அரசியல் பலமிழந்து எமது போராட்டங்களை எம்மால் வெற்றியுடன் முன்னெடுக்க முடியாது. புலம்பெயர் வாழ் தமிழர்களின் பங்கு இதில் மிக முக்கியமானது. தமிழ் மக்களின் உரிமைகளுக்காக சர்வதேச ரீதியாக அவர்கள் போராட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். பொருளாதார மற்றும் அரசியல், கல்வி ரீதியாக நாம் பலமாக உயரவேண்டும். எமது எதிர்கால இருப்புக்காக இந்த விடயங்களை நாம் கட்டாயம் ஒன்றிணைந்து செய்யவேண்டும். உடைந்துபோய் தனித்தனிக் கட்சிகளை ஆரம்பித்து அரசியல் செய்யும் தமிழ்ப் பிரதிநிதிகளே! அனைவரும் ஒன்றிணைய முன்வாருங்கள்.

**சுழியோடி**

# நெருக்கடி மத்தியில் வாழ்வாதாரம், கடன் மற்றும் சமூகப் பாதுகாப்பு

கொவிட்-19 மற்றும் அதனைத் தொடர்ந்து இலங்கை எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடியின் மத்தியில் சமூகப் பாதுகாப்பின் நிலை தொடர்பான ஆய்வு ஒன்று பொருளாதார நீதிக்கான பெண்நிலைவாதக் குழுமத்தினால் கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி ஆகிய பகுதிகளில் முன்னெடுக்கப்பட்டது.

**ஆய்வினூடான அவதானிப்புகள்**

வேலைவாய்ப்புகள் குறைவடைகிறது, வாழ்க்கைச் செலவு அதிகரிக்கிறது. இதன் மத்தியில் உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்வது சுமையாக மாறியுள்ளது. மக்கள் கடன் நிலைக்குள் தள்ளப்படும் அளவு சடுதியாக அதிகரித்துள்ளது. இவற்றை ஆய்விற்கூடாக அவதானிக்க முடிந்தது.

இந்த நிலையில், அரசின் தற்போதைய சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றமுடியாத சிறியளவு பணத்தை வழங்குகின்றன. அதிகூடிய பணவீக்கம் ஏற்பட்டுள்ள சூழலில் கிடைக்கும் இச்சிறிய பண உதவியை உணவு, கல்வி, மருத்துவம் போன்ற அத்தியாவசிய தேவைகளில் எந்தத் தேவைக்காகப் பயன்படுத்துவது என்ற ஒரு குழப்பம் மக்கள் மத்தியில் உள்ளது. உலக நாணய நிதியம் மற்றும் உலக வங்கியினால் முன்மொழியப்பட்ட அஸ்வெசும திட்டத்தின் கீழ் அண்மையில் நடத்தப்பட்ட தேர்வில் தற்போது பயனாளர்களாக இருப்பவர்கள் உட்பட தேவையுடைய பலர் இத்திட்டங்களுக்குள் உள்வாங்கப்படவில்லை.

உடனடித் தாக்கங்களாக மேற்கூறப்பட்டவை காணப்படினும் மக்கள் நீண்டகால வரலாற்று பின்னணிகளின் தாக்கத்துடனே இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிந்தது. அந்த வகையில் பிராந்திய ரீதியாக வடக்கை எடுத்து பார்க்கும்போது அது இலங்கையின் ஏனைய பகுதிகளில் இருந்து முற்றிலும் வேறுபட்ட ஒரு அனுபவத்தைக் கொண்டதாக இருக்கிறது.

**வடக்கின் அனுபவம்**

எழுமாறாக ஆய்வுக்குள் உள்வாங்கப்பட்ட குடும்பங்களின் வரலாற்றில் காணப்பட்ட ஒற்றுமையான விடயமாக யுத்தத்துடன் ஏற்பட்ட வாழ்வாதார பாதிப்புகள் இருந்தது. அவர்கள் தங்கள் அனுபவங்களைப் பகிர்ந்தபோது 1995 இலிருந்து 2009ஆம் ஆண்டுவரை பல தடவைகள் இடப்பெயர்வுகளை சந்தித்துள்ளதாகவும், ஒவ்வொரு தடவையும்தாம் சிறிதுசிறிதாக சேமித்த அத்தனையும் இழந்த விரக்தியின் மத்தியில் ஆரம்பத்தில் இருந்து தமது வாழ்க்கையை மீள கட்டியெழுப்பும் சுமையை முழுமையாக சுமக்க வேண்டியிருந்ததாகவும் கூறியிருந்தனர்.

யுத்தம் நிறைவடைந்து ஒன்றரை தசாப்தங்களானாலும் இன்றுவரை இவ் வரலாற்றுப் பின்னணி கிராமப்புற பொருளாதாரத்தில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திவருகிறது. இங்கு போரினால் பாதிக்கப்பட்ட மக்களாக இவர்களை வெளிக்காட்டுவது கட்டுரையின் நோக்கமல்ல, மாறாக அரசாங்கத்தின் கிராமப்புற அபிவிருத்தி கொள்கைகளில் காணப்பட்ட குறைபாடுகளும் அதன் தொடர்ச்சியாக மக்கள் எதிர்கொள்ளும் சவால்களையும் வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

மக்கள் தங்கள் அனுபவங்களுக்கூடாக கூறுவது, யுத்தம் நிறைவடைந்து மீள்குடியேற்றங்கள் நடைபெற்றபோது வீட்டுத்திட்டங்கள் மட்டுமே வழங்கப்பட்டது. வாழ்வாதாரங்களை முன்கொண்டுபோவதற்கு நிலையான உதவிகள் வழங்கப்படவில்லை. இவ்வீடுகளை முழுமையாக கட்டிமுடிப்பதற்குக் கூட விடுவிக்கப்பட்ட நிதி போதவில்லை. இதனால் கடன்களை பெறவேண்டிய ஒரு சூழலும் உருவாகியிருந்தது.

வாழ்வாதார உதவிகளைப் பொறுத்தவரை, எப்போதாவது ஒரு சில தடவை அரசினால் வழங்கப்படும் பயனாளர் தெரிவு நிபந்தனைகளுக்கமைவான சில உதவிகளும் நிறுவனங்களிடமிருந்து பகுதி அளவிலான நன்கொடைகளுமே கிடைத்தன. வாழ்வாதாரத்தை நிலையாகக் கட்டியெழுப்புவதற்கு இத்திட்டங்கள் தொடர்ச்சி தன்மையற்றவையாகவும் பகுதியளவிலான உதவியை வழங்குவதாகவும் இருந்தன. தமக்கான பொருத்தப்பாடுடைய வாழ்வாதாரங்களை கட்டியெழுப்பும் முயற்சியில் மக்கள் நுண்நிதி கடன் பொறிக்குள் சிக்கினர். இதனால் ஏற்பட்ட பாதிப்புக்களின் உச்ச நிலையை 2016 - 2017ஆம் ஆண்டுகளில் நாம் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

நுண்நிதிகடன்பொறியிலிருந்து முற்றாக மீள்வதற்கு முன்னரே கொவிட்-19 நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய ஒரு நிர்பந்தம் ஏற்பட்டது. இதன்போது வெளியே வேலைக்குச் செல்ல முடியவில்லை. அந்த நேரம் அரசிடமிருந்தும், நன்கொடையாளர்களிடமிருந்தும் கிடைத்த ஒரு சில நிவாரண உதவிகளும் மக்கள் அந்த நெருக்கடியை கடந்து வருவதற்கு தற்காலிகமாக உதவின. வாழ்வாதார முதலீடுகளுக்காகஎடுத்த கடன்களால் வருமானத்தை ஈட்ட முடியவில்லை. கடனை மீளசெலுத்துவதற்கான காலநீடிப்புகள் வழங்கப்பட்டன. இருப்பினும், அவர்கள் கடன்களை மீளச்செலுத்த வேண்டியவர்களாகவே இருந்தனர்.

**வாழ்வாதாரத்தின் தற்போதைய நிலை**

தற்போது நாட்கூலி தொழிலாளர்களுக்குஒருவாரத்தில்3அல்லது 4நாட்கள்மட்டுமே வேலைவாய்ப்புகள் காணப்படுகின்றன. கூலித்தொழிலாளியின் ஒரு நாளுக்கான கூலி 1,500 ரூபாவில் இருந்து 2,500 ரூபாவாக அதிகரித்திருப்பினும், ஒரு நாளுக்கான குடும்பச்செலவு 2,500 - 3,000 ரூபாவாக அதிகரித்துள்ள வாழ்க்கை செலவுகள் மத்தியில் போதியதாகவில்லை.

விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் தமது முதலீட்டுக்கேற்ற விளைச்சலையும்



உற்பத்திகளுக்கு ஏற்ற நியாயமான விலையையும் பெறமுடியாமல் இருக்கிறார்கள். கொவிட்-19க்கு முன்பு, ஒரு ஏக்கர் நெல் உற்பத்தி செய்வதற்கு 50,000 ரூபா செலவாகும். அதன் மூலம் 30 மூடை விளைச்சலைப் பெற முடியும். உணவுத் தேவைக்காக எடுத்தது போக ஏனையவற்றை விற்று சிறிய இலாபமும் கிடைக்கப்பெற்றது. தற்போது நெல் உற்பத்திக்கு 140,000 ரூபா செலவாகின்றது (அரச மானியங்கள் உள்ளடங்கியதான யூரியாவின் விலை மட்டுமே 1,500 ரூபாவிலிருந்து 10,000 ரூபாவாக அதிகரித்துள்ளது), விளைச்சலும் குறைவடைந்துள்ளது. அரசாங்கம் நெல்லின் விற்பனை விலையை ஒரு மூடை 5,000 ரூபாவாக நிர்ணயித்திருக்கிறது. கடற்றொழிலாளர்கள் ஒரு நாள் தொழில் செல்வதற்கு 40 - 60 லீற்றர் மண்ணெண்ணெய் தேவைப்படுகிறது. முன்பு 1 லீற்றர் எண்ணெய் 87 ரூபாவாக இருந்து 380 ரூபாவாக அதிகரித்து தற்போது 245 ரூபாவாக உள்ளது.

இவ்வாறான வாழ்வாதார நெருக்கடி மத்தியில் ஒவ்வொரு நாளும் உண்பதும், உடுப்பதும், கல்வி கற்பதும் பாரிய சவாலாக மாறியுள்ளது. பெரும்பாலான வீடுகளில் இக்குறைந்த வருமானத்தில் குடும்பத்தை நிர்வகிப்பது என்பது பெண்களுக்கு பாரிய அழுத்தமாக மாறியிருக்கிறது. அதேநேரம் இவற்றிலிருந்து தம்மை விடுவிக்க அக்குடும்பத்தின் பெண்கள் சில முயற்சிகளையும் செய்கிறார்கள். அதாவது கிராம மட்டங்களில் உள்ள கூட்டுறவு அமைப்புகளிலும் சிறு குழுக்களிலும் தங்களால் இயன்றபோது சிறிய அளவிலாவது சேமிப்பதன் மூலமும், தேவைப்படும்போது கடன் வாங்குவதன் மூலமும் தங்கள் பணத்தை நிர்வகிப்பதற்கு அவர்கள் முயல்கின்றனர். ஆனால், நிதிக்கான தேவை அதிகரிப்பதால் அதை தமக்கான வாய்ப்பாகக் கருதி நுண்நிதி நிறுவனங்களும் புதிய தந்திரோபாயங்களுடன் மீண்டும் மக்களிடம் வருகிறார்கள். தாம் இக்கடன்களால் பாதிக்கப்படுகிறோம் என்பதைத் தெரிந்தும் கூட வேறு வழிகள் இல்லாமல் மக்களும் அவர்களிடம் கடன் பெறுகின்றனர்.

தற்போது மக்கள் கடன் நிலைக்குச் செல்வது யுத்தத்தின் பின்னரான நிலையிலிருந்து வேறுபட்டதாக இருக்கிறது. ஏனெனில், வருமான இழப்புகள் மத்தியில் ஏற்கனவே பெற்ற கடன்களை மீளச்செலுத்தவும் வேண்டும், அதேநேரம் அதிகரித்துள்ள வாழ்க்கை செலவுகள் மத்தியில் நாளாந்தம் உண்பதற்கும், உடுப்பதற்கும் கல்வி கற்பதற்கும் கூட கடன்களை பெறவேண்டும். இதனால் மீளமுடியாத ஒரு கடன் சுழலுக்குள் சிக்குகின்றனர். வாழ்க்கை முழுவதும் கடன்களுடன் வாழவேண்டிய நிர்பந்தத்திற்குள் தள்ளப்படுகிறார்கள். கூட்டுறவு மற்றும் சிறு குழுக்கள் செயற்படும் இடங்களில் அவற்றுக்கூடாக செய்யப்படும் சிறிய சேமிப்புகளும், அதை அடிப்படையாக வைத்து வழங்கப்படும் கடன்களும் முற்றாக கடன் சுழலுக்குள் மூழ்கி விடாமல் மக்களை தற்காலிகமாக பாதுகாக்கின்றன. ஆனால் இப்படியே எத்தனை காலங்களுக்கு தொடர முடியும்?

**எதிர்காலம்**

காலத்திற்கு காலம் நெருக்கடிகள் ஏற்படும்போது குடும்பங்கள் தங்களின் வாழ்வாதாரங்களை இழப்பதும், கடன்பொறிக்குள் சிக்குவதும் மீண்டும் மீண்டும் ஏற்படுகின்றது. வாழ்வாதார வாய்ப்புகள் குறைவடையும்போது உணவா? கல்வியா? என்ற தெரிவுக்கு நடுவில் மக்கள் திண்டாடுகின்றனர். இது நீண்ட காலத்தில் சமூக பொருளாதார அபிவிருத்தியில் பாரிய தாக்கத்தைசெலுத்தும். இந்தச்சூழலில் சமூகப் பாதுகாப்புக்கான திட்டங்கள் முக்கியத்துவமானவையாக இருக்கின்றன.

சமூகப் பாதுகாப்பு என்பதில் உணவு, உறையுள், கல்வி, மருத்துவம் என்பவற்றுடன் கிராமப்புற அபிவிருத்திக்குப் பொருத்தமான வாழ்வாதாரங்கள், கடன் மற்றும் சந்தைப்படுத்தல் வாய்ப்புகளும் கவனத்தில் கொள்ளப்படவேண்டும். யுத்தம் நிறைவடைந்தவுடன் அதற்கான ஒரு தேவை காணப்பட்டபோதும் அரசிடம் கிராமப்புற வாழ்வாதார அபிவிருத்திக்கான நிலையான அபிவிருத்தித் திட்டம் இருக்கவில்லை. தற்போதைய நெருக்கடியுடன் கிராமப்புற பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான ஒருவாய்ப்புமீண்டும்உருவாகியுள்ளது. இந்தச் சூழலில் கடந்த ஜூன் முதலாம் திகதி ஜனாதிபதி ஆற்றிய 2048ஆம் ஆண்டை நோக்கிய அபிவிருத்தி திட்டமிடல் தொடர்பான உரையில் இவை கவனத்தில் கொள்ளப்படாமல் இருப்பது அரசாங்கத்தின் அஜாக்கிரதையாகப் பார்க்கப்படவேண்டி உள்ளது. தமக்கான அபிவிருத்தி என்னவாக இருக்க வேண்டும் என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.

**சுகன்யா காண்டீபன்**
(பொருளாதார நீதிக்கான பெண்நிலைவாதக் குழுமம்)

# தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் மலையக மக்கள்



மூன்று தசாப்த கால யுத்தத்துக்குப் பின்னான இலங்கையின் அரசியல் சூழல் பல மாற்றங்களைக் காண விழைகின்றது. இதில் உள் - புற நோக்கங்கள் பல இருக்கலாம். எது எவ்வாறெனினும் அவரவர் அவரவருக்கு இயன்ற முறைகளிலும் வழிகளிலும் தமது இருப்பை உறுதி செய்வதற்கான முனைகளில் ஈடுபாடு காட்டவேண்டியது அவசியமாகின்றது.

யுத்தம் இலங்கையின் வடகிழக்குப் பிரதேசத்தையும் அங்கு வாழ்கின்ற தமிழ் மக்களையும் மையப்படுத்தியிருந்தாலும் அது சர்வதே ரீதியாக தமிழர், தமிழ் மொழி பேசுவோர், தமிழ்மொழி எனும் பரப்புகளுக்குள் தாக்கத்தை செலுத்தியுள்ளது. வடகிழக்கு வாழ் இலங்கைத் தமிழ் மக்களிலிருந்து தமிழ்த்தேசியத்துக்கான போர் தொடங்கியிருந்தாலும் வட கிழக்குக்கு உள்ளேயும் வெளியேயும் வாழ்ந்த - வாழ்கின்ற தமிழ் பேசும் மக்கள் அனைவரும் போருக்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்களிப்பும் செய்துள்ளார்கள், பாதிக்கப்பட்டுமிருக்கிறார்கள்.

தமிழ்த்தேசியப் போராட்டத்தின் தாற்பரியங்களை தேடியறியாது அது தமக்கானதும்தானா என்பதையும் அறியாது அந்த களத்திலும் உணர்வு ரீதியாகவும் பங்கேற்றவர்கள் இந்திய வம்சாவளி மலையகத் தமிழர்கள். இதனால் போரினாலான பாதிப்புகளில் ஏனையோர் போன்றே மலையக மக்களும் பெரும்துன்பப்பட்டுள்ளார்கள்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் தமிழ்த்தேசியப்போராட்டத்தரப்பினரால் வெளியேற்றப்பட்டதன் பின்னர் தமக்கும் தமிழ்த்தேசியத்துக்கான விடுதலையில் பங்குண்டு என்கிற மனநிலை முஸ்லிம்களிடத்தில் மறைந்துவரத் தொடங்கியதையே அரசியல் சூழலில் அவதானிக்க முடிகின்றது. மறுபுறத்தில் மலையக அரசியல் செயற்பாட்டுத்தளத்தில் உள்ள தலைவர்கள் தமிழ்த்தேசியத்துக்கு ஆதரவாக குரல் கொடுத்தும், தன்னை தமிழ்த் தேசியவாதிகளாகக் காட்டிக் கொண்டும், தமிழ்த்தேசியப் போராட்ட அமைப்புகளுடன் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை முன்னெடுத்தும் மலையக மக்களை தமிழ்த்தேசிய கருத்தியலில் மூழ்கடித்து வைத்திருந்தனர். இதற்கு பல ஆதாரங்களைச் சொல்லலாம்.

ஞாபகமூட்டலுக்காக, ஈரோஸ் தமது *13* அங்கத்தவர் கொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையில் ஒன்றை மலையக மக்களுக்காக ஒதுக்கியமை (அமரர் இராமலிங்கம்பாராளுமன்ற உறுப்பினர் - ராகலை), திம்பு கோட்பாட்டில் மலையக மக்களின் பிரஜாவுரிமை பற்றிய ஒரு அத்தியாயம் உள்வாங்கப்பட்டமை, அமரர் சந்திரசேகரன் (மலையக மக்கள் முன்னணியின் தலைவர்) தமிழ்த்தேசிய வடகிழக்கு அமைப்புகளுடன் இணைந்து ஆரம்பகால அரசியல் நடவடிக்கைகளில் செயற்பட்டமை, பின்னாளில் விடுதலைப்புலிகள் அமைப்புடன் நேரடியாக தொடர்பு வைத்திருந்தமை, உதவி செய்தமை, சிறை சென்றமை, தவிரவும் அமரர் சந்திரசேகரன் மற்றும் ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் போன்றோர் பொங்கு தமிழ் நிகழ்வின் பிரதானமானவர்களாக கலந்துகொண்டமை, *2002*ல் போர்நிறுத்த உடன்பாடு நிலவிய காலத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் படத்தையும் தனது படத்தையும் ஒரே சுவரொட்டியில் சேர்த்து மலையகம் உட்பட கொழும்பு நகரங்களில் ஒட்டியதோடு பொங்கு தமிழுக்கு சமனான ஒரு நிகழ்வை நுவரெலியாவில் நடாத்தியமை போன்றவற்றை இப்போதைக்கு கூறிக்கொள்வோம்.

இத்தகைய உந்துதல்களினால் மலையக இளைஞர்கள் பலரும் தமிழ்த் தேசியப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டு உயிரிழப்பு, சிறைவாசம், எவ்விதத் தொடர்புமில்லை எனினும் தன்னை உறுதிப்படுத்த அடையாள அட்டை இல்லாத காரணத்தால் வருடக்கணக்கில் சிறைவாசம் என தமிழ்த் தேசியப் போராட்டத்தில் மலையக மக்கள் விரும்பியோ விரும்பாமலோ பங்காளிகளாகிவிட்டனர். இவர்களின் அரசியல் தொழிற்சங்கத் தலைமைகள் தம்மையும் தமிழ்த்தேசிய ஆதரவாளர்களாக காட்டிக் கொண்டதன் மூலமும் தமிழ்த் தேசியப் போராட்டத் தலைமைகள் அந்த ஆதரவை ஏற்றுக்கொண்டதன் மூலமும் மலையக மக்கள் தமது உண்மையான பிரச்சினைகளைப்பற்றி அக்கறை கொள்ளாது போனார்கள். நாளை உருவாகப் போகும் தமிழருக்கான நாட்டில் தமக்கும் பங்குண்டு என்ற கனவிலேயே அவர்கள் வாழ்ந்துவிட்டதாகத் தோன்றுகிறது. அந்த அப்பாவி மக்களின் கனவுகளுக்கு அவர்களது தலைவர்களும் ஏட்டிக்குப்போட்டியாக தீனி போட்டிருப்பதை மேற்சொன்ன நிகழ்வுகளால் விளங்கிக் கொள்ளலாம்.

இன்று தமிழ்த் தேசியத்துக்கான ஆயுதப்போராட்டம் அதன் முன்னெடுப்பாளர்களுக்குச் சாதகமாக அமையாத முடிவினை தந்திருக்கிற ஒரு சூழலில், ஆயுதப்போராட்டத்தின் பின்னான அரசியல் தலைமைகள் ஆளும் பெரும்பான்மை சிங்களத் தலைமைகளிடம் பேச்சுவார்த்தை நடாத்தித்தான் தீர்வுகளைக் காணவேண்டும் என்கிற நடைமுறை நிலவுகின்ற சூழலில் மலையக மக்களின் இருப்பு, வாழ்வு குறித்து யார் எத்தகைய முடிவை நோக்கி நகர்த்துவது என்பது இப்போது எழுந்திருக்கும் வினா.

இந்தியாவிலிருந்து இலங்கைக்கு அழைத்துவரப்பட்ட மலையக மக்களின் *250* ஆண்டுகால இலங்கை வாழ் வரலாற்றில் *70* வருடகால அரசியல் தொழிற்சங்க வரலாறும் அடங்குகின்றது. *1947*களில் இவர்கள் இலங்கை நாடாளுமன்றத்தில் *7* அங்கத்தவர்களைக் கொண்டிருந்தனர். அது இனவாதிகளின் கண்களை உறுத்தவே மலையக மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. பின்னர் *1977* வரை நியமனத் தெரிவின் மூலம் அரசியல் காலம் தள்ளியமையும் *1977*க்குப்பின் இன்றுவரை அவர்களின் அபிவிருத்திப் பணிகள் என்ற போர்வையில் அரசாங்கத்துடனான கைகோர்ப்புடனும் அரசியல் நகர்ந்து செல்ல இன்னும் அடிப்படை பிரச்சினைகளில் இருந்து முழுமையாக விடுபடாத மக்கள் கூட்டமாகவே வாழ்ந்து வருகின்றனர்.

எவ்வகையிலேனும் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளை புறந்தள்ளிப் பார்க்காது இவர்களது அடிப்படை பிரச்சினைகள் குறித்து பார்வையை செலுத்துவது பொருத்தமானது. இன்னும் மலையகத் தமிழர்களில் பலருக்கு பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லை அல்லது முறையாகப் பதியப்படுவதில்லை. இன்னும் மலையகத் தமிழர்களில் பலருக்கு தமது அடையாளத்தை உறுதிப்படுத்தும் தேசிய அடையாள அட்டை இல்லை. தமது ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் வாக்குரிமை முழுமையாக இல்லை அல்லது வாக்காளர் இடாப்புகளில் அவர்களை பதிவு செய்துகொள்வதில் திட்டமிட்ட புறக்கணிப்பு இடம்பெறுகின்றது. ஏன் இவர்கள் இலங்கை நாட்டின் பிரஜைகள் என்றுகூட இன்னும் முழுமையாக பிரகடனப்படுத்தப்படவில்லை. இந்த நிலைமைக்கு காரணம் என்ன?

*1948*ல் குடியுரிமை பறிக்கப்பட்டதன் பின்னர் அதனை மீளப் பெறுவதில் ஏற்பட்ட அரசியல் புறப்படுகைகள் *1960*களில்பெருவாரியாக இருந்ததும் *1977*க்குப்பின் வாக்குரிமை சிறுகச்சிறுக கிடைக்கத்தொடங்கியதும் மந்தமானது. வாக்குரிமையைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் அதனாலான அறுவடைகளை சிலர் தமது குடும்பம் சார்ந்த அரசியலுக்குப் பயன்படுத்திக் கொள்ள, மற்றையோர் அவர்களிடம் பிழைப்பு நடாத்தும் ஒரு போக்கு வளரத் தொடங்கியது. இந்தப்பட்டியலுக்குள் படித்தவர்கள் என சொல்லிக்கொள்ளும் பலர் அதிகாரி பதவிகளில் ஒட்டிக்கொண்டமை அரசியல் வறட்சி நிலைக்கு ஒரு காரணம் என்பதை ஏற்றுக்கொண்டே ஆகவேண்டும்.

*1977*க்குப் பின் தமிழ்த் தேசியப் போராட்டம் வெகுஜனமயப்பட்டதோடு, தாம் தெரிவு செய்த தலைவர்கள் அமைச்சர்களாவதற்கே என்றும் தமது உரிமைக்கான போராட்டம் தமிழ்த் தேசியப் போராட்டத்துடன் இணைந்தது என்றும் அது இறுதியில் கிடைக்கும் என்ற மனப்பாங்கிலும் மலையக மக்கள் இருந்துவிட்டனர் அல்லது அவ்வாறான மனப்பாங்கை தமிழ்த்தேசிய ஆதரவு ஊடகங்கள் தோற்றுவித்தன. எனவே தாம் வாக்களித்தவர்கள் அமைச்சுப் பதவிகளுடாக தமக்கு அபிவிருத்திப் பணிகளை பெற்றுக்கொடுப்பதையே அரசியல் உபாயமாக காட்டிக்கொள்ள மக்களும் அந்த கலாசாரத்திற்கு பழக்கப்பட்டுவிட்டனர். தமது அடிப்படை உரிமைகளான பிரஜாவுரிமை, பிறப்புப்பதிவு, தேசிய அடையாளம், வாக்குரிமை போன்ற விடயங்களை மானசீகமான தலைவர்கள்பெற்றுத்தரப் போகும் பெருந்தீர்வில் அடைந்துவிட முடியும் என வாளாவிருந்துவிட்டார்கள் அல்லது அது குறித்து சிந்திக்காமலேயே இருந்துவிட்டார்கள்.

ஒருபுறம் *1977* முதல் அமைச்சுப்பதவிசார் அரசியற் தலைமைகளுக்கு பழகிப்போன இந்த மலையக மக்களை மறுபுறம் தமிழ்த் தேசியத்தலைமைகள் எவ்வாறு அணுகின என்பதும் ஆராயப்பட வேண்டியது. திம்பு கோட்பாட்டில் மலையக மக்களின் பிரஜாவுரிமை பிரச்சினை முன்வைக்கப்பட்டமையை மறுப்பதற்கில்லை. எனினும் *2002*ம் ஆண்டு போர்நிறுத்த உடன்பாடு அமுலிலிருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் நடாத்தப்பட்ட நேரடி பத்திரிகையாளர் மாநாட்டில் வே.பிரபாகரன் தெரிவித்த கருத்துகள் மலையக மக்கள் குறித்த தமிழ்த்தேசிய போராட்டத்தலைமையின் உண்மையான பக்கத்தைக் காட்டியது. மலையக மக்கள் குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது அவர்கள் தமது பிரச்சினைகளைத் தாமேதான் பார்த்துக்கொள்ள வேண்டும் எனக் கூறினார். அந்த மக்கள் யாருக்கு வாக்களித்தார்களோ அவர்களிடம்தான் தமது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் எனும் தொனிப்பட கருத்துத் தெரிவித்தார்.

ஒட்டுமொத்த தமிழ்த்தேசிய விடுதலை என உயிர் கொடுக்க முன்வந்த, யுத்த சூழ்நிலையினால் தமிழர்கள்என்ற பொது அடையாளத்தில் வாழ்வைத் தொலைத்த மலையக மக்கள் தமது மானசீகமான தலைமை தம்மைப்பற்றி கொண்டிருக்கும் கருத்து குறித்து மீள்பரிசீலனை செய்ய வேண்டிய காலம் அப்போதே தோன்றியிருந்தது. ஒருவேளை யுத்த நிறுத்த உடன்பாடு தொடர்ந்து சமாதான உடன்பாடுகள் தமிழ்த் தேசியத்துக்கு சாதகமாக எட்டப்பட்டு வடகிழக்கு வாழ் தமிழ் மக்களின் நிலைமை இன்றைய நிலைமையைப் போலல்லாது இருந்திருப்பினும்கூட மலையக மக்களின் நிலை இப்போதுள்ள நிலையிலிருந்து மாற்றத்தையேனும் கண்டிருக்காது என்பதுதான் யதார்த்தம். எனவே தமிழ்த்தேசியப் போராட்டத் தலைமைகளாலும் அதனைப் போற்றிப் புகழ்ந்த தமது தலைமைகளாலும் பௌதீக அபிவிருத்திக்கு அப்பால் அரசியல் மட்டத்தில் கைவிடப்பட்டுள்ள மலையக மக்களின் அடிப்படை தேவைப்பாடுகள் குறித்த கவனம் செலுத்துதல் இப்போது இன்றியமையாததாகின்றது.

மலையக மக்களின் அடிப்படை பிரச்சினைகளான பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை, வாக்குரிமைப்பதிவு போன்றன யாரால் நிறைவேற்றப்படுதல் வேண்டும்? படித்தவர் முதல் பாமரர் வரை தேர்தல்களில் தெரிவு செய்யப்படும் அரசியல்வாதிகளிடம் இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வை வேண்டி நிற்கின்றனர். அவர்களும் தமக்குப் போதுமான அதிகாரத்தை வழங்குவதன் மூலம் (தமக்கு அளிக்க வேண்டிய வாக்குகளைத்தான் அப்படி சொல்கிறார்கள்) இந்த உரிமைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என ஒவ்வொரு தேர்தலிலும் வாக்குறுதியளித்து தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்வதுமே இடம்பெற்று வருகின்றது. மாறாக உண்மையாகக் கேட்டுப் பெறவேண்டிய தேவைப்பாடுகள் மறைக்கப்பட்டுள்ளன அல்லது தெரியாமலிருக்கின்றன.

மேற்படி அடிப்படை விடயங்களை மக்கள் அடைந்து கொள்ளும் அரச நிர்வாக பீடம் கிராமமட்ட அரச நிர்வாகியான கிராம உத்தியோகத்தர் எனும் கிராம நிலதாரி கையிலேயே உள்ளது. இவரே அரசாங்க நிர்வாகப் பொறிமுறையின் கடைசி நிலை அதிகாரி. மக்களுடன் நேரடியாக தொடர்புகளை மேற்கொள்பவர். மலையகத்தமிழர் செறிந்து வாழும் நுவரெலியா, பதுளை மாவட்டங்களில் மாத்திரமே இவர்களுக்காக இவர்களில் இருந்தே ஏறக்குறைய *100* பேர் கிராம உத்தியோகத்தர்களாக கடமையாற்றுகின்றனர்.

**தொடரும்...**

**மறவன்**

# பிராந்திய செய்திகள்

## கல்முனை இளைஞர்களின் முன்மாதிரியான செயற்பாடு



கல்முனை மட்டக்களப்பு பிரதான வீதியில் பேரூந்து தரிப்பிடமாக ஒன்றரை வருடமாக சேதமடைந்து காணப்பட்ட நிழற்குடையினை கல்முனை இளைஞர்களின் முயற்சியின் பலனாக திருத்தி அமைக்கப்பட்டு மக்களின் பாவனைக்காக மீண்டும் வழங்கியுள்ள செயற்பாடு மக்கள் மத்தியில் பாராட்டு பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் குறித்த நிழற்குடை தொடர்பில் சமூக ஊடகங்களின் வாயிலாக கல்முனை வாழ் இளைஞர்கள் பாவனைக்கு உதவாத நிழற்குடையை திருத்துவது யார் என குறிப்பிட்டு விமர்சனங்களை வெளியிட்டிருந்தனர். இந்த நிழற்குடையை அண்மையில் உள்ள கல்முனை ஆதார வைத்தியசாலை மற்றும் அருகில் உள்ள பாடசாலை உள்ளிட்ட அரச தனியார் ஊழியர்கள் பாவித்து வந்திருந்த போதிலும் அந்நிழற்குடை பாவனைக்கு உகந்த நிலையில் இல்லாமல் உடைந்து காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதற்கமைய குறித்தநிழற்குடை நிலைமையினை சமூகஊடகங்களில் கண்டு வெளிநாடுகளில் இருந்த தங்கள் நண்பர்களின் உதவியுடன் அந்நிழற்குடையை திருத்தி அமைத்து செவ்வாய்க்கிழமை (18) மக்கள் பாவனைக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. மேலும் இதற்காக உதவி செய்த லண்டனில் வசிக்கும் நண்பருக்கும் சக நண்பர்களுக்கும் களத்தில் நின்று அனைத்து வேலைகளையும் செய்து முடித்து தந்த ஒவ்வொருவருக்கும் குறித்த செயற்பாட்டிற்கு அனுமதியினை பெற்றுகொடுத்த வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தொழிநுட்பஉதவியாளருக்கும் அதன் நிறைவேற்று பொறியியலாளருக்கும் கல்முனை இளைஞர்கள் நன்றிகளை தெரிவித்துள்ளனர். (பாறுக் ஷிஹான்)

## போதைப்பொருளை விட ஆபத்தாக கைத்தொலைபேசி பாவனை



மூன்று அல்லது நான்கு அல்லது ஐந்து வயதில் குழந்தைகளைச் சேர்த்து விடுகின்றீர்கள். இது ஆபத்தானது. ஐந்து வயதே முன்பள்ளி செல்ல சிறந்தது. பெற்றோர்களாகிய நீங்கள் பிள்ளைகளை முன்பள்ளியில் சேர்த்துவிட்டு உடன் தன் பிள்ளை எழுதவேண்டும் வாசிக்க வேண்டும் என ஆசிரியர்களைக் தொல்லைப் படுத்தாதீர்கள்.

முன்பள்ளிக் கற்றல் என்பது பிள்ளைகளை தரம் ஒன்றிற்கு போக முன் ஆயத்த நிலைப் பயிற்சிகள் செயவதற்காகதான். எனவே இம் முதற்படிக்கு நாம் என்ன செய்யவேண்டும். பிள்ளைகளுக்கு தசைநார்ப் பயிற்சி உடலியக்கம் திறன் செயற்பாடுகள் வடிவமைக்கப்பட்டு திட்டமிட்ட வழிகாட்டலில் இடம்பெறுகின்றது. பாடுதல் ஆடுதல் ஒட்டுதல் வெட்டுதல் கிழித்தல் மணல் மண்ணில் விளையாடுதல் பறத்தல் இழுத்தல் என பல்வகைப் செயற்பாடுகளுடாகவே பயிற்சிகள் வழங்கப்பட்டு வளர்ச்சியடைந்துவரும் கைகளை பலப்படுத்தவும் உறுதிப்படுத்தவும் மேலும் விளையாட்டு மணி அடித்தால் பந்தை அடித்தல் சுத்தம் செய்தல் துடைத்தல் பிடித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகள் வழங்கப்படுகின்றன.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் பிள்ளைகள் தரம் ஒன்றிற்கு தயார்படுத்தும் ஆரம்ப நிலையாகும். அதை விட்டு தனது பிள்ளை எழுத வேண்டும். வாசிக்க வேண்டும் என ஆசிரியர்களைக் தொந்தரவுபடுத்தாது பயிற்சிகளை பிள்ளைகள் ஆரோக்கியமாகப் பெற உதவ வேண்டும். எதையும் திணித்து அவசரப்படுத்தினால் தீங்கு தான் பின்விளைவாக அமையும். பிள்ளைகளின் முதிர்ச்சி பயிற்சி இரண்டும் ஒருங்கிணைந்து உரிய காலத்தில் எழுத வாசிக்கப் பழகும் என்ற நல்ல செய்தியை பெற்றோர் பெற்று செயற்பட அனைவரும் ஒத்துழைப்பு வழங்க முன்வாருங்கள்.

அத்துடன் கைத்தொலைபேசி பாவனை என்பதும் தற்போது போதைப் பொருளை விட ஆபத்தாக அமைந்துள்ளது. அன்றாட ஊடக செய்திகளில் கைத்தொலைபேசி குற்றங்கள் அதிகரிப்பு என்ற செய்தியே இடம்பிடித்துள்ளது. இதனால் பெற்றோர்கள் தம் பிள்ளைகளில் அக்கறை செலுத்துங்கள். இன்று நாம் வாழும் உலகம் முழுவதும் கைத்தொலைபேசி பாவனைக்குள் உள்வாங்கப்பட்டுவிட்டது. நாம் எதைச் செய்வதென்றாலும் எம் தேடல் கைத்தொலைபேசியில் தங்கி உள்ளது. இப் பழக்கம் தற்போது சிறுவர் முதல் முதியோர் வரையும் ஆட்கொண்டுவிட்டது. இதனால் அனைவரதும் சிந்திக்கும் ஆற்றல் வாசிப்புத்திறன் புதுமைகள் படைக்கும் திறன் என பல திறன்களை செய்யமுடியாமல் ரோபோக்கள் போல் இயங்குகின்றனர்.

இதனால் நேரம் வீண் விரயமாக்கப்படுகின்றது. ஆன்மீகம் இல்லாமல் போகின்றது. நல்லொழுக்கம் விழுமியம் குறைவடைகின்றது. கல்வி பாழாகிறது. பண்பாடுகள் மறைகின்றன. அன்னியப் பண்பாடுகள் நிலைபேறாகின்றன. எதிர்காலம் இன்னும் மோசமான நிலைக்கு தள்ளப்படுவதுடன் எதையும் சிந்திக்காத மனநோயாளர்களாக உலாவித் திரியும் நிலைமை தோன்றும்.

எனவே தேவைக்கு கைத்தொலைபேசிகளை பயன்படுத்த நாம் அனைவரும் ஒன்றிணைந்து சமூகப்பொறுப்புள்ள நற்பிரஜையாக மாற வேண்டும் என கல்முனை அஸ்-ஸஹ்றா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதியா தெரிவித்தார்.

## ஊடகவியலாளரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவி

மன்னம்பிட்டி கொட்டலீ பாலத்தில் இடம்பெற்ற தனியார் பேருந்து விபத்தில் மரணம் அடைந்த அம்பாறை மாவட்டம் ஒலுவில் பகுதியை சேர்ந்த ஊடகவியலாளர் இஜாஸ் என்பவரின் குடும்பத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் நிதியுதவி தியாகி அறக்கொடை நிதியத்தின் தலைவர் வாமதேவன் தியாகேந்திரனினால் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ லங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் பணிப்பாளர் ஊடகவியலாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் ஒட்டமாவடி பிரதேச சபை பிரதான மண்டபத்தில் கடந்த புதன்கிழமை (19) மாலை நடைபெற்ற நிகழ்வில் இந் நிதியுதவி வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு’ தொடர்பான விருந்தினர் விரிவுரை



இலங்கை தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சமூக விஞ்ஞானங்கள் துறையின் வரலாற்றுப் பிரிவானது தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை கலை கலாசார பீடத்தின் கலை அரங்கத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலை கலாசார பீடத்தின் அனைத்துத் துறை மாணவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் பிரதம அதிதியாக பங்கேற்றதுடன், கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பீடத்தின் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கலந்து சிறப்பித்தனர். வரலாற்றுப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளரும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் முன்னாள் துறைத் தலைவருமான கலாநிதி அநூஷியா சேனாதிராஜா வரவேற்புரையை வழங்கினார். தொடர்ந்து கலை கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் நிகழ்வு தொடர்பான அறிமுகத்தையும் கருத்தாடல் சம்பந்தமான புலமைசார் ஆரம்பத்தினையும் எடுத்துரைத்தார்.

அதனைத் தொடர்ந்து தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ் பிரதம அதிதி உரையை நிகழ்த்தினார். மேலும் பல்கலைக்கழகங்களில் இவ்வாறான கல்வி மற்றும் ஆய்வு ரீதியான கருத்தாடல்கள், விரிவுரைகளின் அவசியத்தை சுட்டிக்காட்டியதுடன் உலக நாடுகளின் அனுபவங்களையும் பகிர்ந்துகொண்டார்.

தென்னாசியாவில் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் அறிவுசார் வரலாறு தொடர்பான விருந்தினர் விரிவுரை பிரதான நிகழ்வாக இடம்பெற்றது. இந்நிகழ்வின் வளவாளராக இந்தியாவின் மொஹாலி பஞ்சாப்பின் அறிவியல் கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான இந்திய நிறுவனத்திலிருந்து (Indian Institute of Science Education and Research) மனிதநேய மற்றும் சமூக விஞ்ஞானங்கள் துறையின் தலைவரும் இணைப் பேராசிரியருமான கலாநிதி வி.ராஜேஷ் விரிவுரையை ஆய்வுக் கண்ணோட்டத்தில் வழங்கியிருந்தார். இந்நிகழ்வில் ஏறத்தாழ 200இற்கு மேற்பட்ட மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றிருந்தனர்.

இந்தியாவின் முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாற்றை ஆய்வு ரீதியில் முன்வைத்த வளவாளர், இலங்கையின் முற்போக்கு இலக்கிய இயக்கங்கள் சம்பந்தமான தேடலின் அவசியத்தையும் எடுத்துரைத்தமை சிறப்பிற்குரியது. இந்நிகழ்வை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் ஆகியோர் இணைந்து முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கதாகும். முற்போக்கு இலக்கிய இயக்கங்களின் வரலாறு தொடர்பான அறிவைப் பெறும் வகையில் வினா, விடைக்கான நேரம் ஒதுக்கப்பட்டதுடன் மாணவர்கள் அதிகளவான பயன்களைப் பெற்றுக்கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (மாளிகைக்காடு நிருபர்)

## சமுர்த்தி பயனாளியின் வீடு திருத்தப்பட்டு கையளிக்கின்ற நிகழ்வு



சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவின் சமூக அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் 2023 ஏப்ரல் மாத சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட சாய்ந்தமருது 16 ஆம் பிரிவைச் சேர்ந்த பயனாளியின் வீட்டின் குறை வேலைகள் திருத்தப்பட்டு உத்தியோகபூர்வமாக கையளிக்கின்ற நிகழ்வு பிரதேச செயலாளர் எம். எம்.ஆசிக் தலைமையில் (20) இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமை பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி. எம்.நஜீம், சமூர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.ஜாபிர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஆதம்பாவா, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

# சினி துளிகள்




## சுட்டுக்கொல்லப்பட்ட பிரபல பாடகி ஹசிபா நூரி

பாகிஸ்தானில் அடையாளம் தெரியாத நபர்களால் ஆப்கானிஸ்தானின் பிரபல பாடகி ஹசிபா நூரி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

ஆப்கானிஸ்தானை சேர்ந்த பிரபல பாடகி தான் 38 வயதான ஹசிபா நூரி.

16 ஆம் திகதி பாகிஸ்தானின் கைபர் பக்துன்க்வாவில் உள்ள குசாவில் ஒரு நிகழ்ச்சியில் அடையாளம் தெரியாத நபர்களால் துப்பாக்கியால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இவர் 2021 ஆம் ஆண்டு ஆப்கானிஸ்தான் தலிபான்களிடம் இருந்து தப்பி பாகிஸ்தானில் தஞ்சம் புகுந்து இருந்தார்.

நூரியின் நண்பரான கோஸ்போ அஹ்மதி, அவர் இறந்த செய்தியை ஒரு சமூக ஊடக இடுகையில் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஹசிபா நூரியின் உயிரிழப்பு பாகிஸ்தானில் உள்ள ஆப்கானிஸ்தான் அகதிகள் எதிர்கொள்ளும் கடுமையான ஆபத்தை உணர்த்துகிறது.

சுமார் 14 லட்சம் பதிவு செய்யப்பட்ட அகதிகள் மற்றும் எண்ணற்ற ஆவணமற்ற அகதிகள் பாகிஸ்தானில் குடியேறியுள்ளனர்.



## கவனம் ஈர்க்கும் விக்ரம் பாடல்

விக்ரம் நடிப்பில் மிகவும் எதிர்பார்க்கப்பட்ட படம் 'துருவ நட்சத்திரம்'. இந்த படத்தை கவுதம் மேனன் இயக்கியுள்ளார். கதாநாயகியாக ரீத்துவர்மா நடித்திருக்கிறார்.

இவர்களுடன் பார்த்திபன், ராதிகா சரத்குமார், சிம்ரன், ஐஸ்வர்யா ராஜேஷ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தின் பணிகள் 2017–ஆம் ஆண்டிலேயே தொடங்கப்பட்டது.

வெளிநாடுகளில் முக்கிய காட்சிகள் படமாக்கப்பட்டன. படத்தை 2018–ல் திரைக்கு கொண்டு வர திட்டமிட்டிருந்த நிலையில், சில காரணங்களால் தள்ளிப்போனது.

இதையடுத்து சமீபத்தில் இப்படத்தின் இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாகவும் 'விரைவில் ஜான் உங்களை சந்திப்பார்' என்றும் படக்குழு போஸ்டர் ஒன்றை வெளியிட்டு தெரிவித்திருந்தது.

இதையடுத்து, 'துருவ நட்சத்திரம்' திரைப்படத்தின் இரண்டாவது பாடலான 'ஹிஸ் நேம் இஸ் ஜான்' பாடல் (ஜூலை 19) காலை வெளியானது.

அதன்படி, இப்படத்தின் பாடல் வெளியாகி சமூக வலைதளத்தில் ரசிகர்களின் கவனம் ஈர்த்து வருகிறது.

## நடிகர் சார்லி சாப்ளினின் மகள் காலமானார்

பிரபல மறைந்த நகைச்சுவை நடிகர் சார்லி சாப்ளின். இவரது மனைவி ஊனா ஓ நீல். இந்த தம்பதிக்கு பிறந்த 8 குழந்தைகளில் 3வது குழந்தையாக கலிபோர்னியா மாகாணத்தின் சான்டா மோனிகா நகரில் பிறந்தவர் ஜோசபின் சாப்ளின்.

இவரது தந்தை சாப்ளினின் 1952 ஆம் ஆண்டு வெளியான லைம்லைட் படத்தில் இளம் வயதில் நடிகையாக அறிமுகம் ஆனவர் ஜோசபின் சாப்ளின்.

அதன்பின் எண்ணற்ற படங்களில் நடித்துள்ளார். 1972 ஆம் ஆண்டில் இவர் நடிப்பில் வெளியான 'தி கேன்டர்பரி டேல்ஸ்' என்ற படம் விருது வென்றது. பின்பு, லாடியர் டெஸ் பாவஸ், எஸ்கேப் டு தி சன் ஆகிய படங்களிலும் அதே ஆண்டில் நடித்து புகழ் பெற்றார். ஹெமிங்வே என்ற தொலைக்காட்சியில் வெளியான தொடரிலும் அவர் நடித்துள்ளார்.

இந்த நிலையில், பாரீஸ் நகரில் வசித்து வந்த அவர், கடந்த 13 ஆம் திகதி தனது 74 வது வயதில் காலமானார் என அவரது குடும்பத்தினர் அறிவித்து உள்ளனர். அவருக்கு சார்லி, ஆர்தர் மற்றும் ஜூலியன் ரோனட் என 3 மகன்கள் உள்ளனர். இதனை அமெரிக்காவில் இருந்து வெளிவரும் வெரைட்டி என்ற ஊடகம் தெரிவிக்கின்றது.



## வில்லன் கதாபாத்திரத்தில் கமல்



இயக்குனர் நாக் அஸ்வின் இயக்கத்தில் பிரமாண்டமாக உருவாகி வரும் திரைப்படம் 'புராஜெக்ட் கே' (Project K). இந்த படத்தில் பிரபாஸ், தீபிகா படுகோனே, அமிதாப் பச்சன், கமல், திஷா பதானி, உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

இப்படத்திற்கு சந்தோஷ் நாராயணன் இசையமைக்கிறார். சயின்ஸ் ஃபிக்சன் படமாக உருவாகும் இப்படத்தை வைஜெயந்தி மூவிஸ் நிறுவனம் தயாரிக்கிறது. 'புராஜெக்ட் கே' படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ வெளியானது.

அதன்படி, இப்படத்திற்கு 'கல்கி 2898- ஏடி' (KALKI 2898-AD) என படக்குழு தலைப்பு வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்து கிளிம்ப்ஸ் வீடியோவை வெளியிட்டுள்ளது.

மேலும் இதில் நடிகர் பசுபதி முக்கிய கதாபாத்திரத்தில் இடம்பெற்றுள்ளார். இந்நிலையில் இப்படத்தில் கமலின் கதாப்பாத்திரம் குறித்த தகவல் வெளியாகியுள்ளது. அதன்படி இப்படத்தில் கமல் வில்லனாக நடிப்பதாக கூறப்படுகிறது.

மேலும் நெகடிவ் ரோல் இல்லாமல் பாசிட்டிவ் ரோல் கிடையாது. ஒரு படத்திற்கு நெகடிவ் ரோல் முக்கியமானது என்று கூறியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.



## வைரலாகும் சதீஷ் பட டீசர்

இயக்குனர் லோகேஷ் கனகராஜிடம் இணை இயக்குனராக பணியாற்றிய வெங்கி இயக்கத்தில் சதிஷ் நடித்துள்ள திரைப்படம் 'வித்தைக்காரன்'. இதில் கதாநாயகியாக சிம்ரன் குப்தா நடித்துள்ளார்.

மேலும் ஆனந்தராஜ், ஜான் விஜய், ரமேஷ் திலக், தங்கதுரை, மதுசூதனன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படத்தை அருள்நிதி நடிப்பில் வெளியான தேஜாவு படத்தை தயாரித்த வைட் கார்ப்பட் ஃபிலிம்ஸ் சார்பில் கே.விஜய் பாண்டி தயாரித்துள்ளார்.

இப்படத்தின் டப்பிங் பணிகள் சமீபத்தில் நடைபெற்றது. இந்நிலையில், இப்படத்தின் புதிய அப்டேட்டை படக்குழு வெளியிட்டுள்ளது. அதன்படி, இப்படத்தின் டீசர் தற்போது வெளியாகியுள்ளது. கடத்தலை மையமாக வைத்து உருவாகியுள்ள இந்த டீசரை இசையமைப்பாளர் ஜி.வி.பிரகாஷ் மற்றும் கீர்த்தி சுரேஷ் தங்களது சமூக வலைதளத்தில் பகிர்ந்துள்ளனர்.

## மரியான் கொண்டாட்டத்தில் ஏ.ஆர்

இயக்குனர் பரத்பாலா இயக்கத்தில் கடந்த 2013–ஆம் ஆண்டு வெளியான திரைப்படம் 'மரியான்'. இந்த படத்தில் தனுஷ் கதாநாயகனாக நடித்திருந்தார். இவருக்கு ஜோடியாக பார்வதி நடித்திருந்தார்.

மேலும், இப்படத்திற்கு ஏ.ஆர்.ரகுமான் இசையமைத்திருந்தார். மீனவர் கதாபாத்திரத்தில் நடித்திருந்த தனுஷ் தனது சிறந்த நடிப்பை இப்படத்தில் வெளிப்படுத்தியிருப்பார்.
இப்படம் வசூல் ரீதியாக வெற்றி பெறவில்லை என்றாலும் விமர்சன ரீதியாக நல்ல வரவேற்பை பெற்றது.

ஏ.ஆர்.ரகுமான் இசையில் இப்படத்தில் இடம்பெற்றிருந்த பாடல்கள் அனைத்தும் சூப்பர் ஹிட்டாக அமைந்தது. அதில், 'நேற்று அவள் இருந்தால்', 'கொம்பன் சூறா', 'சோனா புரியா' போன்ற பாடல்கள் இன்றளவும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கிறது.

இந்நிலையில், 'மரியான்' திரைப்படம் வெளியாகி பத்து ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இதனை கொண்டாடும் விதமாக ஏ.ஆர்.ரகுமான், தனுஷ், பார்வதி, பரத்பாலா ஆகியோர் சமூக வலைதளத்தில் லைவ் செய்து மகிழ்ந்தனர். இந்த லைவ்விற்கு ரசிகர்கள் லைக்குகளை குவித்து கொண்டாடினர்.

இந்த லைவ் வீடியோவிற்கு முன்பு மரியான் புகைப்படத்தை பகிர்ந்து லைவ் போலாமா நமது சிந்தனைகளை பகிர்ந்துகொள்ள என ஏ.ஆர். ரகுமான் பதிவிட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

# மாவிலாறு மகிந்தவும் முள்ளிவாய்க்கால் பிரபாகரனும் நடந்தது என்ன?



சுழியோடி

21

தமிழ் மக்களை ஆழ்ந்த சோகத்தில் ஆழ்த்திய நிகழ்வாக விடுதலைப்புலிகளின் சிறப்பு தளபதியான பிரிகேடியர் பால்ராஜ் அவர்களின் வீரச்சாவு நிகழ்வு அன்று வன்னியில் நிகழ்ந்தது. உண்மையில் போராளிகள் தமிழ் மக்களின் மனங்களில் மட்டுமல்ல சிங்கள படைகளினதும் படைத் தளபதிகளினதும் ஆட்சியாளர்களினதும் மனங்களில் எல்லாம் நிறைந்து இருந்தவர் தளபதி பால்ராஜ். அதாவது எதிரிக்கு எதிரியாகவும் மக்களுக்கு மக்களாகவும் போராளிகளுக்கு போராளியாகவும் பொறுப்பாளர்களுக்கு தளபதியாகவும் அண்ணனுக்கு தம்பியாகவும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு வலது கரமாகவும் திகழ்ந்தவர் எங்கள் பால்ராஜ் அண்ணா.

எல்லோராலும் செல்லமாக லீமா என்று அழைக்கப்படும் பால்ராஜ் அண்ணாவின் இழப்பு செய்தி (20-05-2007) அன்று அளம்பில் பகுதியில் நடந்தேறுகிறது. பால்ராஜ் அண்ணாவின் விடுதலை போராட்ட வரலாறு சொல்ல முடியாது, எழுத முடியாது வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. தமிழீழ விடுதலையின் முதுகெலும்பாக திகழ்ந்தவர்



தமிழர்களின் வரலாற்றில் முதல் மரபுவழிபடையணியாகதிகழ்வதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி. விடுதலை போராட்டத்தின் தொடக்க காலத்தில் போராட்டம் பல்வேறு நெருக்கடி நெருக்குவாரங்களை சந்தித்த போதெல்லாம் அதில் இருந்து விடுபட வழி எடுத்து கொடுத்தவரும் தமிழீழ தேசிய தலைவரின் தோழருமான சாள்ஸ் அன்ரனி அவர்களின் நினைவை தாங்கி தொடங்கப்பட்டதுதான் சாள்ஸ் அன்ரனி படையணி. இந்த படையணியின் வரலாறு தமிழீழ மண் எங்கிலும் உண்டு.

சாள்ஸ் அன்ரனி படையணி களத்தில் என்றால் அதற்கு ஒரு பெருமை, காரணம் களம் வெற்றி களமாக மாறும் என்பதுதான். (1983) யூலை (15) நாள் என்னை சுட்டுபோட்டு துப்பாக்கியை எடுத்துகொண்டு போ என்று கட்டளை இட்ட வீரன்தான் லெப்.சீலன் என்று அழைக்கப்படும் சாள்ஸ் அன்ரனி. அவரது நாமம் தரித்து (01-04-1994) அன்று உருவாக்கம் பெற்ற படையணியாக சாள்ஸ் அன்ரனி திகழ்கிறது.

இந்தியாவின் (9) பயிற்சி பாசறையில் பயிற்சி பெற்ற பால்ராஜ் அவர்களின் விடுதலை போராட்ட தொடக்க காலமே போர்கலை வல்லவன் பசீலனுடன் தான் ஆரம்பிக்கிறது. முன்னைய வன்னி மாவட்ட தளபதி மேஜர் பசீலனின் வலது கரமாக திகழ்ந்தவர் லீமா அவர்கள், பசீலனின் கரத்திற்கு வலுச்சேர்க்கும் கரமாக அன்று திகழ்ந்தார். பசீலனின் தாக்குதல் என்று இருந்தாலும் அல்லது பசீலனின் உணவிலிருந்து என்றாலும் அதில் லீமாவின் பங்கு இருக்கும். சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் முதல் தளபதியாகவும் விடுதலைப்புலிகளின் படைபிரிவின் துணைத்தளபதியாகவும் விளங்கியவர் லீமா. களத்தில் தொலைத்தொடர்பு கருவிகளில் லீமாவின் கனீர் என்ற குரல் கேட்டால் போராளிகள் மத்தியில் உத்வேகம் பிறந்துவிடும். அதேவேளை சிங்கள படைக்கு அது பயப்பீதியை கொடுக்கும். களமுனைகளில் சண்டைகள் என்றால் லீமாவின் குரல்கள் தொலைத்தொடர்பில் ஓங்கி ஒலிக்கும்.

தனது கட்டளைகளால் ஏராளமான எதிரியின் படை முகாம்களை தகர்த்து படைத் தளபாடங்களை அள்ளி வந்த சாதனைக்கு சொந்தக்காரர். விடுதலைப்புலிகளின் பலத்தை அதிகரிக்க பெருமளவு வெடி பொருட்கள், படைய பொருட்கள் தேவைப்பட்டன. தனி மனிதனாக செயல்பட்ட லீமா அவர்கள் பல்வேறு தாக்குதல்களில் விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்தினை அதிகரிக்க செய்தார்.

துணிவு, தந்திரம், வேகம் இம்மூன்றின் உருவம்தான் பால்ராஜ் அவர்கள். எதிரி களம் திறப்பதற்கு முன்னர், எதிரிக்கும் களம் திறப்பதில் வல்லவர். புதிய புதிய திட்டங்கள் போர் நுட்பங்களுடன் போராளிகளை வழிநடத்துவதில் வல்லவர் எங்கள் அண்ணன் லீமா. இப்படிப்பட்ட லீமாதான் அன்று சாள்ஸ் அன்ரனி சிறப்பு படையணியின் தளபதியாக எதிரிக்கு சிம்ம சொப்பனமாக திகழ்ந்தார்.

களமுனையில் எதிரியுடன் நேரடியாக சண்டையிட்டு உடலெங்கும் பல விழுப்புண்களை வாங்கிக்கொண்டு களமுனைகளில் வீறுநடை போடுவார் எங்கள் லீமா. விடுதலைப்புலிகளின் போராட்ட வரலாற்றில் என்றும் நிகழ்ந்திராத சாதனையை நிகழ்த்திய வரலாற்று தாக்குதலாக ஓயாத அலைகள் தாக்குதல்கள் நிகழ்ந்தன. இதில் ஓயாத அலைகள் மூன்றில் இத்தாவில் தரை இறக்கத்திற்காக அனைத்து படையணிகளின் பகுதிகளுடனும் லீமா கடல் மார்க்கமாக இத்தாவில் பகுதியில் தரையிறங்கி (34) நாட்கள் தொடர் தாக்குதலினை தொடுக்கிறார். லீமா எங்களுடன் நிற்கிறார் என்ற உறுதியுடன் போராளிகள் களமுனையில் தாக்குதலை தொடுக்கிறார்கள். இவ்வாறுதான் தீச்சுவாலை முறியடிப்பு சமர் என்றாலும் அதிலும் லீமா முழுமையாக தனது படையணிகளுடன் களமிறங்கி எதிரிக்கு தகுந்த பாடம் புகட்டினார் அன்று.

இதன் பின்புதான் சமாதானம் என்ற மாயை உருப்பெறுகிறது. இதிலும் லீமா தன் உடலினை பொருட்படுத்தாமல் பயிற்சி திட்டங்களில் ஈடுபடுகிறார். ஏன் அவரது உடல்நோயினை சீர்செய்ய பன்னாடு ஒன்றிற்கு லீமா அனுப்பப்படுகின்றார். இதன்போது ஒரு அதிசயம் நிகழ்கின்றது. மருத்துவத்தினை முடித்து சிறிலங்காவின் கட்டுநாயக்க விமான நிலையம் வந்து இறங்குகின்றார் லீமா. அப்போது சிறிலங்கா படையின் தளபதிகள் எல்லோரும் பால்ராஜ் அவர்களை ஓர் அதிசயம் போல பார்க்கிறார்கள். அப்போது மட்டும்தான் எதிரியால் லீமாவை நேரடியாக பார்க்க முடிந்தது. அந்த அளவிற்கு எதிரிக்கு கலக்கம் கொடுக்கும் வல்லவனாக திகழ்ந்தவர் லீமா அவர்கள். சிகிச்சை பெற்று திரும்பிய பின் சமாதான காலத்திலும் அவர் சும்மா இருக்கவில்லை.

தமிழீழ தேசிய தலைவர் அவர்களின் கட்டளைக்கு அமைவாக கிழக்கு மாகாணம் செல்கிறார். அங்கு படையணிகளை பயிற்சியில் ஈடுபடுத்துகிறார். அடிப்படை பயிற்சி தொடக்கம் மோட்டார் படை அணிவரை லீமாவின் நெறிப்படுத்தலில் நடைபெறுகிறது. இதன்போது தான் (2004) வாகரையில் ஆழிப் பேரலையிலும் லீமா அவர்களும் பாதிக்கப்படுகிறார்.

எனினும் அதிலிருந்து மீண்டவர் பின்பு வன்னியில் படை கட்டுமானங்களின் மீள்பயிற்சிதொடக்கம்அதிகாரிகளின் பயிற்சி திட்டங்களில் முனைப்புடன் செயற்பட்டு பல மேல்நிலை அதிகாரிகளை உருவாக்குகின்றார். இங்கு படை அணிகளில் உள்ள லெப். கேணல் நிலையுடைய கட்டளை அதிகாரிகளுக்கு படை தந்திரோபாயங்கள் யுத்திகள் என்பன லீமா அவர்களால் நேரடியாக பயிற்றப்படுகின்றது.

கனரக ஆயுதம் இயக்குதல், டாங்கி இயக்குதல், டாங்கிக்கு எதிர்தாக்குதல் செய்தல் போன்ற கனரக ஆயுதங்களை எல்லாம் அவர் திறம்பட கற்று வைத்துள்ளார் என்பது அப்போதுதான் அந்த மேல்நிலை அதிகாரிகள் பயிற்சியில் பங்கேற்றவர்களுக்கு கூட தெரியவருகிறது.

லீமா அவர்களால் உருவாக்கப்பட்ட போர் வீரர்கள் எத்தனையோ பேர்கள் களத்தில் சாதனைகளை படைத்து இருக்கிறார்கள். பயிற்சி தளங்களில் பயிற்சிகளை வழங்கிக்கொண்டு இருந்த நிலையில்தான் லீமா அவர்களுக்கு களமுனை ஒன்றை சீர்படுத்த வேண்டிய உத்தரவு வருகின்றது. அதுமன்னார் களமுனை. குறுகிய காலத்துக்குள் மன்னார் களமுனையினை சீர்செய்துவிட்டார். அப்போதுதான் லீமா அவர்களின் உடல்நிலை சற்று மோசமடைகிறது. இதனால் ஓய்விற்காக விடப்படுகிறார்.

ஆனால் அவர் ஓய்வெடுக்க வில்லை. போராளிகளுக்கு வகுப்பெடுக்கிறார். அங்கும் லீமா அவர்களின் திறமையான நுட்பங்கள் பயிற்றப்படுகின்றது. போர் உச்சமாகிக்கொண்டிருந்த நிலையில், தமிழீழ துணைப்படை கட்டுமானத்தினை லீமா அவர்கள் மேற்கொள்கிறார். விடுதலை போராட்டத்திற்கு ஆட்பலம் சேர்க்கும் பணிகளில் அவர் தன் உடல்நிலையையும் பொருட்படுத்தாமல் நேரடியாக களம் இறங்குகின்றார்.

கிராமங்களில் வீட்டுடன் நிற்கும் முன்னாள் போராளிகளை ஒன்றுதிரட்டி அமைப்பில் இணையுமாறு கதைக்கிறார். இதில் போராளிகள் பலர் இணைகிறார்கள். இணைந்தவர்களின் குடும்ப பராமரிப்பு செலவுகள் தொடர்ச்சியாக லீமா அவர்களினால் கவனிக்கப்படுகின்றது. வீடு இல்லாதவர்களுக்கு வீடு கட்டுவித்து கொடுக்கிறார். இவ்வாறு இயலுமான உதவிகளை மேற்கொண்டு போராட்டத்துக்குள் முன்னைய போராளிகளை புதிய வடிவத்தில் இணைக்கும் பணிகளில் மக்களிடம் சென்று நேரடியாக கதைக்கின்றார். இவ்வாறு இருக்கையில் தான் அன்று அளம்பில் பகுதியில் இவரது சோகமான செய்தி வந்து சேர்கின்றது.

தொடரும்...

# வடக்கிலே காணப்படுபவை தமிழ் பௌத்தம் தான் - ஜனாதிபதி ரணில்

தொல்லியல் பணிப்பாளர் இராஜினாமாவுக்கு தள்ளப்பட காரணமாக இருந்த சர்ச்சைக்குரிய சந்திப்பு குறித்த வீடியோவை நீங்கள் பார்வையிட்டிருப்பீர்கள். அதில் உள்ளபடியே மொழி பெயர்த்திருக்கிறேன்.

தொல்லியல் திணைக்கள பணிப்பாளர் அனுரா மனதுங்க தனது இராஜினாமா கடிதத்தை ஒப்படைத்துவிட்டதாக ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அவரால் கடமையை செய்ய முடியாவிட்டால் விலகும்படியும் வேறு ஒருவரை அந்த இடத்துக்கு நியமிக்க முடியுமென்றும் ஜனாதிபதி கடந்த மே 10ஆம் திகதி ஜனாதிபதி செயலகத்தில் நில முகாமைத்துவம் தொடர்பாக நடந்த கூட்டத்தின் போது தெரிவித்திருந்ததை அறிவீர்கள்.

முதல் தடவை ஒரு இலங்கையின் ஒரு ஜனாதிபதி வடக்கில் இருப்பவை தமிழ் பௌத்தர்களது என்று அறிவித்திருக்கிறார். அதுவும் இனவாத சக்திகளுக்கும், தொல்லியல் தலைமைகளுக்கும் கொடுத்திருக்கும் பதிலடி. ஒரு ஜனாதிபதியே இவ்வாறு நம் நிலத்தில் இருக்கும் பௌத்த சான்றுகள் தமிழர்களுக்கு உரியவை என்று கூறும்போது இன்னும் அது “சிவபூமி” என்று போலித்தனமாக உளறிக்கொண்டு இருக்கப்போகிறோமா?

முல்லைத்தீவு தண்ணிமுறிப்பு நிலத்தில் 229 ஏக்கரை யூன் 30க்கு முன்னர் விடுவிப்பது பற்றிய கடிதத்தை வழங்குதற்கு அமைச்சரும். பணிப்பாளரும் உறுதியளித்தார்கள். (இப்படி ஆரம்பிப்பவரின் பெயர் தெரியாது. சிங்களம் தெரிந்த தமிழர் என்று நினைக்கிறேன்)

தொல்லியல் பணிப்பாளர் மனதுங்க : அதில் ஒரு பிரச்சினை இருக்கிறது சேர். அந்த நிலத்தை விடுவிப்பது சிரமம். அது சிக்கலாக ஆகிவிடும்.

ஜனாதிபதி ரணில் : நீங்கள் அமைச்சரவை முடிவை ஏற்றுக்கொள்ளவேண்டும். இன்னொருதடவை நீங்க இவ்வாறு தேசியகொள்கையைஏற்கமறுத்தால் அது ஒரு பிரச்சினையாகிவிடும்.

சுமந்திரன் : அந்த நிலத்தில் நூற்றாண்டுகளாக விவசாயம் செய்துவருகிறார்கள்.


ரணில் : சரி இப்போது எத்தனை ஏக்கர்கள் வேண்டும்? (ஆணையாளரைப் பார்த்து)

பணிப்பாளர் : தற்போது 72 ஏக்கர்கள் உண்டு. இன்னும் 270 ஏக்கர்கள் எங்களுக்கு வேண்டும் என கேட்டிருக்கிறோம் சேர். இவற்றில் விவசாயம் மேற்கொள்ளும் நிலம் 5 ஏக்கர் மட்டுமே.

ரணில் : சரி அந்த 5 ஏக்கரை திருப்பிக் கொடுக்க முடியுமா?

பணிப்பாளர் : அந்தக் காணி எங்களிடம் இல்லை. அது வன இலாக்காவிடமே இருக்கிறது.

ரணில் : சரி நீங்கள் 270 ஏக்கர்களை எடுத்தால், இந்த விகாரை மகாவிகாரையை விட பெரிதென்கிறீர்களா? மகாவிகாரை, ஜேதவனாராமய, அபயகிரி அனைத்து விகாரைகளையும் சேர்த்தால் கூட நூறு ஏக்கர் வராதே. அவற்றை விட பெரிய விகாரை என்றா எனக்கு நீங்கள் கூறுகிறீர்கள்?



(இடையில் சுமந்திரன் குறிக்கிடுகிற போது. இருங்கள். ஒரு நிமிடம் பொறுங்கள் என்கிறார் ஜனாதிபதி)

இல்லை சேர். அங்கே போய் ஆய்வு செய்து இரண்டு ஆண்டுகளாகின்றன. அவர்கள் அடையாளம் கண்டு குறிப்பிட்ட நிலங்கள் தான் இவை. மீண்டும் அங்கே சென்று அவற்றை மீளாய்வு செய்யலாம்.

ரணில் : நீங்கள் எனக்கு வரலாறு கற்றுக் கொடுக்கிறீர்களா? அல்லது உங்களுக்கு நான் வரலாற்றைக் கற்றுத் தரவா?

பணிப்பாளர் : மகாவிகாரை அளவுக்கு அது பெரிதில்லை தான்...

ரணில் : அப்படியென்றால் அது சிறியதாக அளவா இருக்க வேண்டும். அது முக்கிய இடம். தமிழ் பௌத்தர்கள் வாழ்ந்த இடம். எனவே அதில் பிரச்சினை இல்லை. ஆனால் 275 ஏக்கர்கள் இருக்க முடியாது.

மற்றவர் : பணிப்பாளர் தான் 270 ஏக்கர் நிலத்தில் ஆராயுமாறு பணித்தவர். அதன் பின்னர் அந்த கடிதத்தை மீளப்பெறுவதாக பணிப்பாளரும், அமைச்சரும் தெரிவித்திருந்தார்கள். இங்கே அவர் அப்படி மீளப் பெற முடியாது என்கிறார். அது எங்கள் பிரதேசத்தில் பெரும் பிரச்சினையாக இருக்கிறது.

ரணில் : ஆம் இது முக்கிய தொல்லியல் இடம். இங்கு தான் தமிழ் பௌத்த விகாரை இருந்திருக்கிறது. இதைப் பற்றிய வரலாற்று சான்றுகள் உள்ளன. இதைப் பற்றி கொத்குக என்கிற ஒரு மந்திரி ஒருவரால் ஆக்கப்பட்டது. அவரைப்பற்றிஅறிந்திருக்கிறீர்களா? (பணிப்பாளரைப் பார்த்து) எப்படியோ... 200 ஏக்கர்கள் இருக்கும் என்றெல்லாம் நான் கருதவில்லை. அந்த இடம் பாதுகாக்கப்படவேண்டும். ஆனால் இவ்வளவு நிலம் அதற்குத் தேவையா என்பது தான் பிரச்சினை.

**இந்த சம்பாசனையில் இராச மாணிக்கம் சாணக்கியன்.**

இப்படித்தான் திரியாயவில் பறிக்கப்பட்ட 3000 ஏக்கர் காணி இப்போது தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லை. பனாமுரே திலகவன்ச என்கிற பிக்கு கையகப்படுத்தி அதனை மீண்டும் பறிக்கப்பட்ட மக்களுக்கே விவசாயம் செய்வதற்கு குத்தகைக்கு கொடுக்கிற நிலமை உருவாகியிருக்கிறது.

என்று தொடர்கிறது.

ஜனாதிபதி ரணில், தொல்லியல் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் இல்லாதவை மீண்டும் மக்களுக்கே கொடுக்கப்படவேண்டும். திரியாயவில் 3000 ஏக்கர் ஏன் தேவைப்பட்டது. இனியாவது அவற்றை மீளக் கொடுப்பீர்களா இல்லையா? இதைத் தீர்ப்பீர்களா இல்லையா? நேரடி பதிலைத் தாருங்கள். திரியாய என்பது என்ன?

பணிப்பாளர் : அந்த இடத்தைச் சுற்றித்தான் சேர்...

ரணில் : அங்கே ஒரு பன்சலை அல்லவா இருந்தது.

பணிப்பாளர் : ஓம். ஒரு விகாரை

ரணில் : விகாரை... ஆனால் அங்கே 3000 ஏக்கர் இருக்க வாய்ப்பு இல்லை அல்லவா? அது மட்டுமல்ல திரியாய என்பது ஒரு பன்சலையாக இருக்கவில்லை. அது முன்னொரு காலத்தில் ஒரு கலங்கரை விளக்கமாக (Light house) இருந்தது. முதுமாவிகாரை, யாலவில் உள்ள ஆகாச சைத்திய போன்றவை எல்லாம் உண்மையில் வழிகாட்டும் ஒரு கலங்கரை விளக்கமாக இருந்தவையே. அதன் பின்னர் அங்கே சென்று பிக்குமார் தங்கிக் கொண்டார்கள்.

மேலும் தொல்லியல் முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் என தொல்லியல் திணைக்களம் கண்டுபிடிக்கிற இடங்களை தொல்லியல் திணைக்களம் பொறுப்பெடுத்து பாதுகாக்காமல் அவற்றை ஏன் பௌத்த பிக்குகளிடம் ஒப்படைக்கிறார்கள். சுற்றி உள்ள தமிழர் நிலங்களையும் சேர்த்து அந்த பிக்குகளுக்கு வழங்கி புதிய விகாரைகளையும் அமைக்க வழி ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். அதன் பின்னர் அந்த பிக்குமார் அந்த விவசாய காணிகளை அங்கிருக்கும் மக்களுக்கே குத்தகைக்கு கொடுக்கிற அநியாயமும் நடக்கிறது. இது கேலிக்கூத்து மட்டுமல்ல மோசமான மீறல்.

தொல்லியல் இடங்களாக அடையாளம் கண்டால் அவை மேலும் சிதைவடையாமல் பாதுகாப்பதற்கான (Restoration) செய்யலாமே ஒழிய அங்கே புதிய கட்டுமானங்களை செய்ய முடியாது என்பது தொல்லியல் விதி.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் ரணில் அளவுக்கு வரலாற்றுஅறிவைக்கொண்டவர்கள் இருந்ததில்லை என்பதும் இங்கே கவனிக்க வேண்டும். ரணில் பல கூட்டங்களில் இதனை மெய்ப்பித்து இருப்பதைக் காணலாம். அதுபோல இலங்கையின் அரசியல் தலைவர்களிலேயே பௌத்த மரபுரிமைக்காக சொத்துக்களை அதிகம் தானம் செய்த குடும்பமும் ரணிலின் குடும்பம் தான் என்பதும் வரலாறு.

இந்தப் பின்னணியால் தான் ரணிலோடு மோத விளையும் பிக்குமார் தரப்பு குறிப்பிட்ட எல்லையை தாண்ட முடிவதில்லை. ரணிலிடம் இருக்கும் லிபரல்வாத சிந்தனையும் சேர்ந்து தொல்லியல் சிக்கலில் இந்தப் போக்கைக் கடைப்பிடிக்க முடிகிறது.

ஆனால் மறுபக்கம் ரணில் ஒரு தனித்த நபர் அல்ல. நிறுவனமயப்பட்ட சிங்கள பௌத்த பேரினவாத அரசின் தலைவர். ரணிலிடம் போய் பிரபாகரனிடம் எதிர்பார்த்ததை கோர முடியாது.


தற்போது இந்த உரையாடலைத் தொடர்ந்து ரணிலுக்கு எதிராக பிக்குமார்களும் இனவாத அமைப்புகளும் களத்தில் இறங்கத் தொடங்கி இருப்பதைக் காண முடிகிறது.

ஊடக சந்திப்புகள், கண்டன அறிக்கைகள் எல்லாம் ஏற்கெனவே தொடங்கியாயிற்று. சமூக வலைத்தளங்கள் எங்கும் சிங்களத்தில் ரணிலுக்கு கொடுத்து வரும் தாக்குதல்களும், பேச்சுக்களும் ரணில் மீது கடும் எதிர்ப்பலை தொடங்கப்பட்டுவிட்டதை உறுதிப் படுத்துகின்றன.

ரணிலின் இந்த கருத்துக்கள் இனவாத சக்திகளுக்கு ஒரு பேரிடி தான் என்பதை கவனிக்க முடிகிறது.

**என்.சரவணன்**

# இலங்கையின் பௌத்த வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை...



இலங்கையின் அரசியல் வரலாறு என்பது மிகவும் வினோதமானது. இலங்கையின் சிங்கள அரசியலை தேரவாத பௌத்த கோட்பாட்டின் அடித்தளத்திலிருந்தும், புவிசார் அரசியல் கண்ணோட்டத்தினூடாகவும் நோக்குவது அவசியமானது. மகாவம்சம் என்ற ஐதீக கதையிலிருந்து கட்டமைக்கப்பட்ட "தம்மதீப" கோட்பாட்டினை மையப்படுத்தியே சிங்கள தலைவர்கள் தமக்கிடையிலான அரசியல், பொருளியல், வர்க்க, பதவி போட்டிகளையும் பிரச்சினைகளையும் அணுகுகின்றனர். பொதுவாக ஆதிக்கப் போட்டிகள் ஏற்படுகின்றபோது அதனைத் தமிழருக்கு எதிரான அல்லது சிறுபான்மையினருக்கு எதிரான இனவாதமாக மடைமாற்றி அரசியற் படுகொலைகளை நிறைவேற்றி தமது பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்வர்.

### பௌத்தத்தின் வரலாறு

இத்தகைய போக்கு இலங்கையின் பௌத்த வரலாற்றின் ஆரம்பத்திலிருந்து இன்றுவரை தொடர்வதைக் காணலாம். அத்தகைய நிகழ் போக்கை வரலாற்று ரீதியாக இரண்டு அரசியல் படுகொலை வரலாற்று நிகழ்வுகளை நோக்குவதன் மூலம் இலங்கையின் அரசியல் போக்கினை புரிந்துகொள்ள போதுமானது.

இலங்கையின் தேரவாத பௌத்தத்தின் வரலாறு என்பது கிறிஸ்துக்கு முன் 247இல் இந்தியாவிலிருந்து வருகை தந்த மகிந்த தேரர் அனுராதபுரத்தின் மன்னனான தீசனை பௌத்தனாக மதம் மாற்றி அசோகச் சக்கரவர்த்தியின் பேரான "தேவநம்பிய" என்ற பட்ட பெயருடன் இணைத்து தேவநம்பியதீசன் என்ற பெயரை இட்டு இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட முடியை அணிவித்து அனுராதபுரத்தின் பௌத்த மன்னனாக முடிசூடப்பட்டான்.

அவ்வாறு முடிசூடப்பட்டவன் பேரளவில் மன்னனாக இருந்தானே தவிர உண்மையான முடிக்குரிய, அதிகாரத்துக்குரிய மன்னனாக அசோகச் சக்கரவர்த்தியின் மகனான மகிந்த தேரரே பௌத்த துறவி என்ற வேடத்தில் அனுராதபுரத்திலிருந்து அதிகாரம் செலுத்தினார் என்பதே உண்மையானது.

மகாநாமதேரர் இதனைக் கருத்தில் கொண்டும் அதற்கு பின்னான தொடர் வரலாற்றில் இந்திய ஆக்கிரமிப்பு குறிப்பாகத் தமிழகத்திலிருந்து அனுராதபுரம் நோக்கி தமிழ் மன்னர்கள் படையெடுத்துக் கைப்பற்றியமையும், அதேபோன்று வட இலங்கை அரசர்களான உத்தர தேச மன்னர்கள் அனுராதபுரத்தின் மீது படையெடுத்து ஆட்சியைக் கைப்பற்றி அனுராதபுர மன்னர்களாக முடிசூடிக்கொண்ட வரலாற்றையும் தன் மனதில் கொண்டு இந்தியா மீதும், தமிழர்கள் மீதும் அவருக்கு இருந்த வெறுப்புணர்வுகளும்தான் கிபி ஆறாம் நூற்றாண்டில் மகாநாடு தேரரை "மகாவம்ச" என்ற நூலை எழுதத் தூண்டியது. அந்த நூல் "தம்மதீபக்" கோட்பாட்டை அடித்தளமாகக் கொண்டுள்ளது.

### முதலாவது அரசியல் படுகொலை

அதாவது இலங்கைத் தீவு புத்தபிரானால் பௌத்தத்தைப் பாதுகாப்பதற்கு என்று தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு. (யூதர்களின் ஆசிர்வதிக்கப்பட்ட பூமி இஸ்ரேல் போன்றது) பௌத்தத்துக்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட தீவு என்ற ஐதீகக் கதையின் விளைவுகளைச் சார்ந்து இந்த கட்டுரை எழுதும் நிமிடம் வரை இலங்கை தீவில் தொடர்ந்து தேரவாத பௌத்தர்கள் அல்லாதவர்களும் தம்மதீபக் கோட்பாட்டைக் கடைப்பிடிக்காத பௌத்தர்களும் அரசியல் படுகொலை செய்யப்படுவது தொடர்கிறது.

இந்த வகையில் இலங்கையின் முதலாவது அரசியல் படுகொலை என்பதை வரலாற்றுக் காலங்களில் பார்த்தால் அது கிபி 3ம் நூற்றாண்டின் இறுதியில் மாசேனன் காலத்தில் நிகழ்ந்தது. அன்றைய காலத்தில் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் பௌத்தத்தின் இரு பிரிவுகளான மகாசேன பௌத்தமும், தேரவாத பௌத்தமும் வளர்ச்சி அடைந்து கொண்டிருந்தன. தேரவாத பௌத்தம் என்பது புத்தருடைய பாதச்சுவட்டையும், தந்ததாதுவையும் வழிபடுகின்ற முறைமையைக் கொண்டது. அது வட இந்தியாவில் இருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டது.

மாகா ஞான பௌத்தம் என்பது புத்தருடைய உருவச்சிலையையும், உருவச் சிலைக்கு தூபதீபம் காட்டுகின்ற கிரியை முறைகளையும் கொண்டது. மகாசேன பௌத்தம் தென்னிந்தியாவிலும் குறிப்பாகத் தமிழர்கள் மத்தியிலும் வட இலங்கைத் தமிழர்கள் மத்தியிலும் பெரு வளர்ச்சி அடைந்திருந்தது. அது சைவ வைதீக மதங்களின் அனைத்து வழிபாட்டு முறைகளையும் கிரியைகளையும் உள்வாங்கி இருந்த மதமும்கூட.

கிபி 03 ஆம் நூற்றாண்டில் அனுராதபுரத்தில் தேரவாத பௌத்தத்தை வீழ்த்தி மகாசேன பௌத்தம் எழுச்சி பெற்றது மகாசேன பௌத்தத்தை அன்றைய காலத்தில் தென்னிந்தியா தமிழர்களும் வட இலங்கைத் தமிழர்களும் ஏற்றுப் பெரு வளர்ச்சி எய்தியிருந்தது. அத்தகைய எழுச்சியின் விளைவு அனுராதபுரத்தை நோக்கியும் மகாசேன பௌத்தம் பரவத் தொடங்கியது. அவ்வாறு பரவுவதற்கு வித்திட்டவர் தமிழகத்திலிருந்து வருகை தந்த சங்கமித்தார் எனப்படும் தமிழ் பௌத்த துறவியாவார்.

### மகா விகாரை

அவர் அனுராதபுரத்தில் மகா விகாரையில் இருந்த தேரவாத பௌத்த துறவியான சங்க பாலரை சமயத்திலே தோற்கடித்தார். அதனால் அனுராதபுர மன்னன் கோத்தபாயன் மகாசேன பௌத்த தர்மத்தைப் பின்பற்றினான். அனுராதபுரத்தில் அரச மதமாக மகாஞானத்தை சங்கமித்தர் நிலைநாட்டினார். அவருக்காகவே அனுராதபுரத்தில் "அபயகிரி" என்ற மகாசேன பௌத்த விகாரை கட்டப்பட்டது.

அதேநேரம் தேரவாத பௌத்தர்களுடைய "மகாவிகாரை" கவனிப்பாரற்று அழிவு நிலைக்குச் சென்றது. இந்தப் பின்னணியில் அனுராதபுர ஆட்சி அதிகாரத்தின் உட்பூசல்களும் அதிகாரப் போட்டியின் விளைவைச் சந்தர்ப்பவாதமாகப் பயன்படுத்தி அதிகாரத்தை தங்கள் பக்கம் திருப்புவதற்கான சதி நடவடிக்கைகள் மகாசேனன் காலத்தில் இடம்பெற்றது.

தமிழர்கள்பின்பற்றியமகாஞாண பௌத்தம் அனுராதபுரத்தில் நிலை பெறப்போகிறது என்ற அச்சத்தினை நாட்டு மக்களுக்குப் பரப்பிய மகாசேன மன்னனின் மூன்றாவது மனைவியாகிய அனுலாதேவியும் சங்க பாலர் என்கின்ற தேரவாத பௌத்த துறவியும் இணைந்து சங்கமித்தர் எனப்படும் தமிழ் மகாசேன பௌத்த துறவியைப் படுகொலை செய்தனர். இதுவே இலங்கைத் தீவில் பௌத்தத்தின் பெயரால் நிகழ்ந்த முதலாவது அரசியல் படுகொலையாக வரலாற்றில் பதிவாகியுள்ளது.

இத்தகைய வரலாற்றுப் போக்கின் தொடர்ச்சியாகக் காலனித்துவ ஆட்சியிலிருந்து விடுபட்ட இலங்கை தீவின் அரசியல் அதிகாரத்தைச் சிங்கள பௌத்த மேலாதிக்கத்தின் கீழ் கொண்டு வருவதற்குச் சிங்களத் தலைவர்கள் தமது சந்தர்ப்பவாத பதவி, பொருளியல் போட்டிகள் நலன்களுக்கும், தமது அற்பத்தனமான பிற்போக்குத் தனங்களுக்கும் இனவாதத்தையும் மதவாதத்தையும் கருவியாகப் பயன்படுத்தி சிறுபான்மையினருக்கு எதிரான இன வன்முறையாக மடைமாற்றி விட்டிருந்தனர்.

### மலையகத் தமிழர்கள்

மலையகத் தமிழர்களுக்கு எதிராகவும், இஸ்லாமியர்களுக்கு எதிராகவும், ஈழத் தமிழர்களுக்கு எதிராகவும் தொடர்ந்து பிரயோகித்து சிங்கள ஆளும் குழாம் அரசியல் அதிகாரத்தைப் பெறுவதும் பொருளியல் நலன்களை அடைவதையும் இலங்கையின் நவீன அரசியல் வரலாற்றில் காண முடியும். இந்த அடிப்படையிலேதான் எஸ்.டபுள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா படுகொலையும் நிகழ்ந்தது. பண்டாரநாயக்கா படுகொலை என்பது பல பரிமாணம் மிக்கது. பௌத்தமும், மேலைத்தேச முதலாளித்துவ அதிகார வர்க்கமும், உள்ளூர் பொருளாதார ஆதிக்க போட்டியும் என மும்முனை சக்திகள் தமது நலன்களை அடைவதற்காகத் தொழிற்பட்டதைக் காணமுடிகிறது.

பண்டாரநாயக்கா படுகொலை என்பது வெறுமனே ஒரு பௌத்த தேரரால் கொல்லப்பட்டது என்ற செய்தி சொல்லப்படுகின்றபோதும் அதனுடைய அடி ஆழம் என்பது இந்த மும்முனை சக்திகளின் நலனிலும் இலாபத்திலும் தங்கியிருந்துள்ளது. 1956ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பண்டாரநாயக்கா முன்வைத்த கோஷம் "நான் வெற்றி பெற்றால் 24 மணி நேரத்தில் சிங்கள மொழிச் சட்டத்தை உருவாக்குவேன் இலங்கையின் அரச மதமாகப் பௌத்தத்தைபிரகடனப்படுத்தி பௌத்த சாசன அமைச்சை உருவாக்குவேன்" என்பனவே முக்கியத்துவம் பெற்றது. அந்த தேர்தலில் வெற்றியும் பெற்றார்.

### கண்டி தலதா மாளிகை

சிங்கள மொழிச் சட்டத்தை நிறைவேற்றினார். அன்றைய காலத்தில் இலங்கை அரசியலில் ஜனநாயகத்துக்குப் பதிலாகப் பெரும்பான்மைவாத ஜனநாயகம் எழுச்சி பெற்றது. இதன் விளைவாகத் தோட்டத் தொழிலாளர் குடியுரிமை பறிப்பு, தமிழர் தாயகத்தில் சிங்களக் குடியேற்றம் எனத் தொடங்கித் தனி சிங்கள மொழிச் சட்டம் என்பவற்றினால் வெகுண்ட சிறுபான்மையினர் மேற்கொண்ட போராட்டங்களைத் தணிப்பதற்காக பண்டாரநாயக்கா, பண்டா -செல்வா ஒப்பந்தத்தை 26-07-1957இல் கைச்சாத்திட்டார்.

ஒப்பந்தத்தை எதிர்த்து 04-10-1957 களனி ரஜமகா விகாரையின் விகாராதிபதி புத்திர கித்திரதேரர் உள்ளிட்ட 200 பிக்குகளும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன உள்ளிட்ட சிங்களத் தலைவர்களும் கண்டி தலதா மாளிகை நோக்கி பாதயாத்திரை செய்தனர். இதனை அடுத்துத்தான் இந்த ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்த மாட்டேன் என பௌத்த பிக்குகளுக்கு வாக்குறுதி வழங்கியதை அடுத்து ஒப்பந்தம் குப்பைக் கூடைக்குள் போய்விட்டது.

அதேநேரம் பண்டாரநாயக்கா பெட்ரோலியம், போக்குவரத்து, பெருந்திட்டம் என்பவற்றைத் தேசிய மயமாக்கி பொருளாதார சீர்திருத்தங்களைச் செய்தார். அத்தோடு சிங்கள கிறிஸ்தவ மிஷனரியிடமும் சிங்கள கிறிஸ்தவ உயர்குலத்தின் வலுவான பிடியிலிருந்த கல்வித்துறையைத் தேசிய மயமாக்கினார். தனியார்த் துறை தேசிய மயமாக்கல் மூலம் பெரும் பாதிப்படைந்த கிறிஸ்தவ உயர் குழாம், கிறிஸ்தவ மிஷினரிகள், மேற்குலக முதலாளித்துவ கம்பனிகளும், முதலாளிகளும் அனைவருடைய பொது எதிரியாக பண்டாரநாயக்கா தென்படத் தொடங்கினார்.

### பௌத்த சாசன அமைச்சு

அரிசி இறக்குமதிக்கான கோட்டாவை விமலா விஜயவர்த்தன அவர்களுக்குக் கொடுக்க மறுத்தார். அன்றைய காலத்தில் விஜயவர்த்தன குடும்பம்என்பது இலங்கையின் முதல்தர செல்வந்த குடும்பமாகக் கருதப்பட்டது. விஜயவர்த்தன ரஜமகா விகாரையின் தருமகர்த்தாவும் கூட. இந்தப் பின்னணியில்தான் ரஜமகாவிகாரையின் விகாராதிபதி புத்தரகித்ரதேரர், விமலா விஜயவர்த்தனவுக்காக பண்டாரநாயக்காவின் மீது வெறுப்புகொண்டார்.

**தொடரும்...**

**நெற்றிப்பொறியன்**



# மலையகத்தில் காணி உரிமை தொடர்பில் மக்களை ஏமாற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் குறித்து மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்

**- பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம் வேண்டுகோள் -**

மலையக மக்களுக்குக் காணி உரிமை பெற்றுக்கொடுப்பதாகக் கூறி வெளிநாட்டுநிதிநிறுவனங்களிடமிருந்து பெருமளவு நிதியைப் பெற்றுக் கொள்ள ஆர்ப்பாட்டங்களை நடத்தி ஏமாற்றி வரும் சில அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாட்டில் மக்கள் விழிப்பாக இருந்து கொள்ள வேண்டும் என தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், "மலையக மக்களுக்கு காணிஉரிமையைமுன்வைத்துசில அரச சார்பற்ற நிறுவனங்கள் எத்தனையோ ஆர்ப்பாட்டங்களை நடத்தி வந்துள்ளன. ஆனால், இன்றுவரை ஓர் அங்குல நிலத்தையாவது பெற்றுக்கொடுத்ததாக வரலாறு கிடையாது. அவர்களின் நோக்கம் எல்லாம் போக்குவரத்துச் செலவுகளோடு, உணவு வசதிகளைச் செய்து கொடுத்து மக்களை ஒன்று திரட்டி ஆர்ப்பாட்டம்நடத்துவதாகக்கூறி ஊடகங்களில் இடம்பிடித்து வெளிநாட்டு நிதி நிறுவனங்களிடமிருந்து பெருமளவு நிதிகளைப் பெற்று, தாங்களும் தங்கள் குடும்பமும் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கவேண்டும் என்பதாகும். இதற்குச் சில அரசியல்வாதிகள் துணைபோவது மலையக மக்களுக்குச் செய்கின்ற மாபெரும் துரோகமாகும்.

அதேநேரம், மலையகத்தில் இயங்கி வருகின்ற சில அரச சார்பற்ற நிறுவனங்கள் உண்மையிலேயே மக்கள் நலன்கருதி செயற்பட்டு வருவதோடு, அரசியல் ரீதியில் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்கி உறுதுணையாக இருந்து வருகின்றன. இவற்றுக்கு நேர்மாறாக மக்களைத் தவறாக வழிநடத்தும் நிறுவனங்களிடம் மக்கள் கவனமாக இருந்து கொள்வதோடு, அரசியல் ரீதியில் தான் எதையும் சாதிக்க முடியும் என்பதையும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

2015ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றபோது, மலையக மக்களுக்குத் தலா 7 பேர்ச் காணியுடன் தனி வீடுகளை அமைத்துக் கொடுத்து அவற்றுக்கான காணி உறுதிப் பத்திரங்களை வழங்க வேண்டும், நுவரெலியா மாவட்டத்தில் சனத்தொகைக்கு ஏற்ப பிரதேச சபைகள், செயலகங்கள் அதிகரிக்கப்பட வேண்டும், மலையகத்துக்கெனத் தனியான அதிகார சபை உருவாக்கப்பட வேண்டும் முதலான கோரிக்கைகளை முன்வைத்து அவற்றைத் தேர்தல் விஞ்ஞாபனத்திலும் இடம்பெறச் செய்து நல்லாட்சி அரசாங்கத்தில் நடைமுறைப்படுத்திக் காட்டியிருந்தோம்.

எனவே, அரசியல் ரீதியில் அல்லாமல் காணி உரிமை பற்றி வாய்க்கிழிய பேசுவதாலும், கலந்துரையாடல்களை நடத்தி அறிக்கை விடுவதாலும், ஊடகங்களுக்குப் பேட்டி கொடுப்பதாலும், குறிப்பிட்ட சிலரைச் சேர்த்துக்கொண்டு எதற்கெடுத்தாலும் ஆர்ப்பாட்டம் செய்வதாலும், அரசியல்வாதிகளை விமர்சனம் செய்வதாலும் எதையும் சாதிக்க முடியாது என்பதை மக்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

மக்களின் உரிமைகளுக்காக பாராளுமன்றத்தில் குரல்கொடுத்து, பிரேரணைகளைக் கொண்டு வந்து, அமைச்சரவையின் அங்கீகாரத்தோடு நடைமுறைப்படுத்த முடியுமே தவிர, வெளிநாட்டு நிதிகளைத் திரட்டிக் கொள்ளத் தனிப்பட்ட ரீதியில் நடத்தப்படும் ஆர்ப்பாட்டங்களால் சமூகத்துக்கு எந்தவிதமான பயனும் ஏற்படப்போவதில்லை" என்று திகாம்பரம் மேலும் தெரிவித்துள்ளார்.

# எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்கான நம்பிக்கையை உறுதிப்படுத்த இந்திய விஜயம் வாய்ப்பளித்துள்ளது

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது இரு நாள் உத்தியோகபூர்வ இந்திய பயணத்தின் போது ஊடகங்களுக்கு (21) கருத்து தெரிவிக்கும்போது, இலங்கை பொருளாதார சீர்திருத்தங்களை சீராக அமுல்படுத்தி வருவதாகவும், இந்தியப் பிரதமருடனான தூதுக்குழு மட்டத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களின் மூலம் நாட்டை ஸ்திரப்படுத்துவதற்கான சாதகமான பெறுபெறுகளை வெளிப்படுத்தி வருவதாகவும் தெரிவித்த ஜனாதிபதி விக்ரமசிங்க, எடுக்கப்பட்ட தீர்மானங்களின் மூலம் இலங்கை அடைந்துள்ள முன்னேற்றம் குறித்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்த வழிவகுத்துள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இந்திய ஊடகங்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்த கருத்துக்கள் வருமாறு, "பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில் புதுடெல்லிக்கு வருவதை கௌரவமாக கருதுகிறேன். கடந்த ஆண்டு ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் நான் இந்தியாவுக்கு முதல் முறையாக வருகை தந்திருக்கும் நிலையில், இந்த பயணம் எனக்கும், எனது அரசுக்கும் மிக முக்கியமான பயணம் என்றே கூறவேண்டும். இந்த பயணத்தின் போது எனக்கும், எனது குழுவினருக்கும் உபசரிப்புக்களை வழங்கிய பிரதமர் மோடிக்கும், இந்திய அரசுக்கும் நன்றி தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் மேம்படுத்தப்பட்ட பொருளாதார, உள்கட்டமைப்பு, தொழில்நுட்ப முன்னேற்றங்களைப் பாராட்டிய ஜனாதிபதி, இந்தியாவின் வளர்ச்சி அயல் நாடுகள் மற்றும் இந்து சமுத்திர வலய நாடுகளுக்கு சாதகமான தன்மையை ஏற்படுத்தும். கடந்த வருடம் இலங்கை எதிர்கொண்ட பொருளாதார, சமூக, அரசியல் ரீதியிலான அசாதாரண சவால்கள் மற்றும் அந்தச் சவால்களை வெற்றி கொள்வதற்காக தன்னால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மறுசீரமைப்பு முயற்சிகள் தொடர்பிலும் பிரதமர் நரேந்திர மோடியிடம் எடுத்துரைத்திருந்தேன். எமது அண்மைய வரலாற்றில் மிக சவாலான காலப்பகுதியில் இலங்கைக்கு வழங்கிய ஒத்துழைப்புக்கு பிரதமர் மோடி அவர்களுக்கும், இந்திய அரசாங்கத்திற்கும், இந்திய மக்களுக்கும் மனப்பூர்வமாக நன்றிகளைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளோம்.

இலங்கையின் அண்மைக்கால நிலைமைகளை மீளாய்வுச் செய்யும் போது, நாட்டின் அனைத்து பகுதிகளிலும் வாழும் இலங்கையர்களின் அனைத்து சமூகங்களுக்கும் பலன் கிட்டும் வகையில், நீதி, நியாயத்துடனான நிலையான, ஸ்திரமான அபிவிருத்தியை நோக்கிய பொருளாதார முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கான எனது அர்ப்பணிப்புக்களை பிரதமர் மோடிக்கு எடுத்துரைத்துள்ளேன். இதற்கு அப்பால் சென்று இலங்கையை பாரிய பொருளாதார மறுசீரமைப்பு பாதைக்கு இட்டுச் சென்றுள்ளதையும், இந்த செயற்பாடுகளின் நிலையான பிரதிபலன்களை இலங்கை தற்போது அடைந்துள்ளதாகவும், நாட்டின் முன்னேற்றம் குறித்து உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நம்பிக்கை மீள கட்டியெழுப்பப்பட்டுள்ளதையும் நான் தெளிவுபடுத்தியுள்ளேன்.

மறுசீரமைப்பு, அதிகாரப் பகிர்வு, அதிகார பரவலாக்கம், வடக்கு அபிவிருத்தித் திட்டத்தின் பலதரப்பட்ட விடயங்களை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்காக நான் முன்வைத்த பரந்துபட்ட யோசனை குறித்து கருத்துக்களையும் நான் அவருடன் பகிர்ந்துகொண்டேன். இந்த பணிகள் குறித்து இணக்கப்பாட்டுடன், தேசிய ஒற்றுமைக்காக பணியாற்றுமாறு நான் பாராளுமன்றத்தின் அனைத்துக் கட்சித் தலைவர்களுக்கும் அழைப்பு விடுத்துள்ளேன். இந்த முயற்சிகளின் போது, பிரதமர் மோடி அவர்கள், தனது ஒத்துழைப்பையும், ஆதரவையும் வெளிப்படுத்தியுள்ளார். நாம் தற்போது எமது பொருளாதாரத்தை, நாட்டிற்கு அதிக வருமானத்தை ஈட்டித் தருவதும், நாட்டின் அனைத்துப் பிரதேசங்களுக்கும் மேம்படுத்தப்பட்ட முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குவதற்கும் அவசியமான அபிவிருத்திப் பாதையில் இட்டுச் செல்லவேண்டும். இந்த நோக்கத்தை வெற்றி கொள்வதற்காக, பலமான பங்களிப்பை அடித்தளமாகக் கொண்டு மேம்படுத்தப்பட்ட தொடர்புகள் ஊடாக எதிர்கால இலங்கை – இந்திய பொருளாதார கூட்டிணைவுக்காக ஒருங்கிணைந்த நோக்கத்திற்காக ஒன்றுபடவேண்டும்.

எமது இருதரப்பு இராஜதந்திர தொடர்புகளில் 75ஆவது வருடத்தைப் பூர்த்திசெய்யும் போது, அடுத்த சில தசாப்தங்களில் எமது எதிர்கால சந்ததியினருக்காக வழங்கக்கூடிய வாய்ப்புகள் மற்றும் மேலதிக வாய்ப்புகளை பெற்றுக்கொள்வதற்கான உள்ளக செயற்பாடுகள் ஊடாக மிகவும் பாதுகாப்பான எதிர்காலத்தை நோக்கி செல்வதற்கான இயலுமை பற்றியும் ஆராய்ந்தோம். இரு நாடுகளுக்கும் இடையில், பல தசாப்தங்கள் பழமையான நாகரிகம், கலாசார, மானிட மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் போதான உள்ளகச் செயற்பாடுகள், வாயிலாக எமது ஒன்றிணைந்த நோக்குக்கான அடித்தளம் உருவாகியுள்ளது.

எமது உறவுகள் என்ற நூல் வரலாற்றிலிருந்தே பிரித்தெடுக்கப்பட்டுள்ளது. எமது எதிர்கால இலக்குகளுக்கான ஆரம்பத்திற்கு நிகழ்காலமே மிகச் சிறந்த தருணமாகும். பொருளாதாரப் பங்காளித்துவத்தின் தொலைநோக்குப் பார்வையை நனவாக்குவதில் நவீன இணைப்பு முக்கியப் பங்காற்றுகிறது. அண்மையில் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட சென்னை மற்றும் யாழ்ப்பாண விமானச் சேவைகள், இரு நாடுகளுக்கும் இடையிலான விமான இணைப்பில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இரு நாடுகளுக்குமிடையில் விமான சேவைகளையும், கப்பல் சேவைகளையும் மேம்படுத்த உடன்பாடு காணப்படுகிறது. அது சுற்றுலா மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்தும்.

தலைமன்னார் – ராமேஸ்வரம் மற்றும் நாகபட்டினம் – காங்கேசன்துறை ஆகிய பகுதிகளுக்கிடையிலான படகு சேவை இரு நாடுகளுக்கான கடல்வழிப் போக்குவரத்துக்கு வலு சேர்க்கும். இலங்கை மற்றும் இந்திய உறவுகளுக்கான வேறு வழிமுறைமைகள் தொடர்பில் ஆராய்வதும் பொருளாதார வளர்ச்சிக்கு மற்றுமொரு வலுவாக அமையும். புதிய மற்றும் முன்னுரிமை வழங்க வேண்டிய துறைகளுக்கு இருதரப்பு பொருளாதாரம் மற்றும் முதலீடுகளை மேம்படுத்துவதற்காக இலங்கை மற்றும் இந்தியா பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கை மிகவும் முக்கியமானது என்ற விடயத்திற்கு நாம் இணக்கம் தெரிவித்துள்ளோம். டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் ஊடாக சேவை வழங்கல் மற்றும் தனி நபர்களை மையப்படுத்திய சேவைகளுக்கான இந்தியாவின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள இலங்கை ஆர்வமாக உள்ளது.

இரு நாடுகளுக்கும் இடையில் மேம்படுத்தப்படும் தொடர்பாடல், சுற்றுலாத்துறை, மனிதர்களுக்கிடையிலான பரிமாற்றங்கள் மற்றும் கலாசார தொடர்பாடல்கள் உள்ளிட்ட துறைகளை வலுவூட்டுவதற்கான முக்கியமான விடயங்களுக்கு நாம் இணங்கியுள்ளோம். தொற்றுநோய் பரவலுக்கு பின்னரான காலப்பகுதியில், இலங்கையின் சுற்றுலாத்துறை தனது வருமானத்தை மேம்படுத்திக்கொள்ளும் நோக்குடன் இருக்கின்ற நிலையில், இந்தியர்களின் இலங்கைக்கான சுற்றுலா மிகப்பெரிய சந்தையாக மாறியுள்ளது. அதனால், Unified Payments Interface (UPI) முறைமையை அடிப்படையாக கொண்ட டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் முறைமையை வலுவூட்டுவதால், ஏனைய துறைகளையும் பலப்படுத்த முடியும்.

பசுமை பொருளாதாரத்திற்கு இலங்கையின் தேசிய முக்கியத்துவம் உலக அர்ப்பணிப்புக்களுக்கு இணங்க வலுசக்தி பாதுகாப்பை உறுதிபடுத்துவதற்காகவும், பசுமை மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி வலுவூட்டலுக்கான இந்தியாவுடன் கைகோர்த்துக்கொள்வது பெறுமதியான வாய்ப்பு என இலங்கை கருதுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் மீள்புதுப்பிக்கத்தக்க சக்திக்கான துறைசார் புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பிலும் வலியுறுத்துகிறேன். இலங்கை மற்றும் இந்தியாவுக்கு இடையிலான அதிக வலுவுடனான மின் பரிமாற்ற தொடர்பு கட்டமைப்பு ஒன்றை நிறுவினால் இருநாடுகளுக்கும் இடையிலான இருவழிப்பாதை மின் வர்த்தகத்திற்கான வழியை ஏற்படுத்தும்.

இந்தியாவின் ஒத்துழைப்போடு, திருகோணமலை இலங்கையின் வலுசக்தி மையமாக அபிவிருத்தி செய்தல் மற்றும் தொழிற்சாலைகள் மற்றும் ஏனைய பொருளாதார நடவடிக்கைகள் தொடர்பிலான மையமாகவும் திருகோணமலையை மேம்படுத்துவது தொடர்பிலான இலங்கையின் இலக்கு முக்கியமானதாகும்.

பிரதமர் மோடி மற்றும் நான் நம்பிக்கை கொண்டுள்ள வகையில், இந்தியாவின் தெற்கு பகுதியிலிருந்து இலங்கை வரையிலான பல்துறைசார் பெற்றோலிய குழாய் கட்டமைப்பொன்றை உருவாக்குவதால், இலங்கையினால் வழங்கக்கூடிய உறுதியான வலுசக்தி விநியோகத்தை உறுதிப்படுத்த முடியும் என்பதே பிரதமர் மோடியினதும் எனதும் எதிர்பார்ப்பாகும். சமூக – பொருளாதார அபிவிருத்தியின் அதிகமான இலக்குகளை அடைந்துகொள்வதற்கான எமது பொது முயற்சியை வெற்றி கொள்வதற்காகவும், எமது மக்களின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்துவதற்கான பால் உற்பத்தி மற்றும் கால்நடை துறைகளில் எமது ஒத்துழைப்புக்களை மேம்படுத்திக்கொள்வது தொடர்பிலும் கலந்தாலோசித்தோம்.

கல்வித்துறையின் ஒத்துழைப்பு எமது இருதரப்பு உறவுகளின் முக்கிய அம்சமாக காணப்படுகிறது. இந்திய உதவியுடன் இலங்கைக்குள் புதிய உயர்கல்வி நிறுவனங்களை நிறுவுவது முக்கியமானதென நம்புகிறோம். இதனால் எமது இளைஞர், யுவதிகளில் அறிவு மற்றும் திறன்களை மேம்படுத்த முடியும் என்பதோடு அவர்களை தேசிய அபிவிருத்தி பொறிமுறைக்குள் உள்வாங்கப்படுவர். எமது இருதரப்பு தொடர்புகளை மீளாய்வுச் செய்வதற்காகவும், உலக மற்றும் கலாசார தொடர்புகளை வலுவாக பயன்படுத்திக்கொள்ளவும் நவீன உலகத்தில் எமது எதிர்கால எதிர்பார்ப்புக்களுக்கான நம்பிக்கையை உறுதிப்படுத்த எனது இந்திய விஜயம் வாய்ப்பளித்துள்ளது என நம்புகிறேன்.

இன்று நாம் நடத்திய கலந்துரையாடல் இலங்கை – இந்தியாவின் அடுத்த 25 வருடங்களுக்கான அடித்தளத்தை இடும் என்றும், இலங்கை அனைத்து சமூக குழுக்களினதும் நிலையான அபிவிருத்தி மற்றும் தேசிய ஒருமைப்பாடு இலங்கையின் அனைத்து சமூகத்தினர் மத்தியிலுமான நல்லிணக்கம் மற்றும் இலங்கை மக்களுக்கு சுபீட்சமான மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உருவாக்குவதற்கான எனது நோக்கத்திற்கு உதவும் என நம்புகிறேன்" என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

# விளையாட்டு

## ஆசிய கிண்ணம் 2023 - போட்டி அட்டவணை வெளியீடு




2023 ஆடவருக்கான ஆசிய கிண்ணத் கிரிக்கெட் தொடருக்கான போட்டி அட்டவணையை ஆசிய கிரிக்கெட் சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, இலங்கை மற்றும் பாகிஸ்தானில் இம்முறை போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதில் இலங்கையில் 9 போட்டிகளும் பாகிஸ்தானில் 4 போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இலங்கையின், கொழும்பு ஆர் பிரேமதாச சர்வதேச விளையாட்டுத் திடல், கண்டி பல்லேகெலே சர்வதேச விளையாட்டுத் திடல் பாகிஸ்தானின் லாஹூர் சர்வதேச விளையாட்டுத் திடல் மற்றும் மல்டன் சர்வதேச விளையாட்டுத் திடலிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

போட்டி அட்டவணைக்கு அமைய, பாகிஸ்தான், இந்தியா மற்றும் நேபாளம் ஆகிய அணிகள் குழு A யிலும், இலங்கை, பங்களாதேஷ் மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் குழு B யிலும் இடம்பெற்றுள்ளன.

பாகிஸ்தான் இந்தியா அணிகள் மோதும் போட்டி செப்டம்பர் 2 ஆம் திகதி கண்டி பல்லேகெலே சர்வதேச விளையாட்டுத் திடலில் இடம்பெறவுள்ளது.

இறுதிப் போட்டி செப்டம்பர் 17 ஆம் திகதி கொழும்பு ஆர் பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளதாக ஐசிசி அறிவித்துள்ளது.

## வீராட் கோலிக்கு டெண்டுல்கர் பாராட்டு



வெஸ்ட் இண்டீசுக்கு எதிரான 2-வது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டியில் வீராட் கோலி அபாரமாக விளையாடி செஞ்சுரி அடித்தார்.

அவர் கிட்டத்தட்ட 5 ஆண்டுகளுக்கு பிறகு வெளிநாட்டு மண்ணில் டெஸ்டில் சதம் அடித்துள்ளார். கடைசியாக 2018-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிரான பெர்த் மைதானத்தில் செஞ்சூரி அடித்தார்.

34 வயதான வீராட் கோலி 111-வது டெஸ்டில் 29-வது சதத்தை பதிவு செய்தார். இதன் மூலம் அவர் பிராட்மேன் சாதனை சமன் செய்தார்.

பிராட்மேன் 52 டெஸ்டில் 29 செஞ்சுரி அடித்து இருந்தார். டெஸ்டில் அதிக சதம் அடித்த வீரர்களில் வீராட்கோலி, பிராட்மேனுடன் இணைந்து 16-வது இடத்தில் உள்ளார். சர்வதேச போட்டிகளில் வீராட்கோலி 76-வது சதத்தை தொட்டார். அவர் டெஸ்டில் 29 சதமும், ஒருநாள் போட்டியில் 46 செஞ்சுரியும், 20 ஓவர் போட்டியில் ஒரு சதமும் ஆக 76 சதத்தை எடுத்து உள்ளார்.

டெண்டுல்கர் 100 சதத்துடன் (டெஸ்ட் 51+ ஒருநாள் போட்டி 49) முதல் இடத்தில் உள்ளார். 2-வது இடத்தில் இருக்கும் வீராட் கோலி அவரை தொடுவதற்கு இன்னும் 24 செஞ்சூரிகள் தேவை. 500-வது சர்வதேச போட்டியில் சதம் அடித்த வீராட்கோலியை கிரிக்கெட்டின் சகாப்தமான டெண்டுல்கர் பாராட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் சமூக வலைதளமான இன்ஸ்டாகிராமில் கூறும்போது, "மற்றொரு நாள், மற்றொரு சதத்தை வீராட்கோலி எடுத்துள்ளார். அவரது ஆட்டம் சிறப்பாக இருந்தது" என்றார்.


## ஓய்வை அறிவித்த லஹிரு திரிமான்ன



அனைத்து வகையான சர்வதேச கிரிக்கெட்டில் இருந்தும் உடனடியாக ஓய்வு பெறுவதாக இலங்கை கிரிக்கெட் வீரர் லஹிரு திரிமான்ன கடந்த (22) அறிவித்தார்.

தனது அதிகாரபூர்வ பேஸ்புக் கணக்கில் பதிவொன்றை மேற்கொண்டு அவர் இதனை தெரிவித்துள்ளார்.

## ஓய்வு முடிவை அறிவித்த பாகிஸ்தான் வீராங்கனை



பாகிஸ்தான் பெண்கள் கிரிக்கெட் அணியின் இளம் வீராங்கனை ஆயிஷா நசீம். 18 வயதான அவர் இதுவரை நான்கு ஒருநாள் போட்டி மற்றும் முப்பது 20 ஓவர் போட்டியில் விளையாடி உள்ளார்.

இந்நிலையில் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக ஆயிஷா நசீம் திடீரென்று அறிவித்து உள்ளார்.

தனது முடிவை அவர் பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியத்திடம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறும்போது நான் கிரிக்கெட்டில் இருந்து விலகுகிறேன். இஸ்லாத்தின் படி என் வாழ்க்கையை வாழ விரும்புகிறேன் என்று கூறினார்.

## ஆசிய விளையாட்டு போட்டியில் 800 பேர் கொண்ட இந்திய குழு பங்கேற்பு



ஆசிய விளையாட்டுப் போட்டி 1951 ஆம் ஆண்டு டெல்லியில் அறிமுகம் செய்யப்பட்டது. அதில் இருந்து 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை ஆசிய விளையாட்டு திருவிழா நடைபெற்று வருகிறது.

கடைசியாக ஆசிய விளையாட்டு போட்டி இந்தோனேசியாவில் 2018 ஆம் ஆண்டு நடந்தது. 19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியை சீனாவில் உள்ள ஹாங்சோவில் நடத்த முடிவு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு செப்டம்பர் 10 முதல் 25 ஆம் திகதி வரை நடத்த திட்டமிடப்பட்டது.

கொரோனா பாதிப்பு காரணமாக இந்த ஆண்டுக்கு தள்ளி வைக்கப்படுவதாக கடந்த ஆண்டு மே மாதம் அறிவிக்கப்பட்டது.

19 ஆவது ஆசிய விளையாட்டு போட்டி செப்டம்பர் 23 ஆம் திகதி முதல் அக்டோபர் 8 ஆம் திகதி வரை நடக்கிறது. மொத்தம் 40 விளையாட்டுக்கள் 482 பிரிவில் நடைபெறுகிறது.

ஆசிய விளையாட்டு போட்டியில் 800 பேர் கொண்ட இந்திய குழு பங்கேற்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ஒவ்வொரு நாடும் பங்கேற்கும் வீரர், வீராங்கனைகளை கடந்த 15 ஆம் திகதிக்குள் அனுப்பி வைக்க வேண்டும் என்று கால அவகாசம் விதிக்கப்பட்டு இருந்தது.

வில்வித்தை, தடகளம், பேட்மின்டன், குத்துசண்டை, செஸ், கிரிக்கெட், வாள் வீச்சு, ஹொக்கி, கபடி, துப்பாக்கி சுடுதல், ஸ்குவாஷ், டென்னிஸ், பளு தூக்குதல், மல்யுத்தம் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுகளில் இந்திய அணி கலந்து கொள்கிறது.

ஜகார்தாவில் 2018 ஆம் ஆண்டு நடந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் 524 பேர் கொண்ட இந்திய அணி 36 விளையாட்டுகளில் பங்கேற்றது.

கடந்த ஆசிய விளையாட்டு போட்டியில் 15 தங்கம், 24 வெள்ளி, 30 வெண்கலம், ஆக மொத்தம் 69 பதக்கங்களை பெற்று இந்தியா 8 ஆவது இடத்தை பிடித்து இருந்தது.

## பத்தாவது டெஸ்ட் சதத்தை பதிவு செய்தார் தனஞ்சய



இலங்கை அணியின் துணைத் தலைவர் தனஞ்சய டி சில்வா தனது 10வது டெஸ்ட் சதத்தை கடந்த (17) பதிவு செய்தார்.

பாகிஸ்தானுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடைபெற்றது.

இந்த போட்டியில் தனஞ்சய டி சில்வா 175 பந்துகளை எதிர்கொண்டு 10 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்சர்களுடன் சதமடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலக வலம்

## 2000 பென்குயின்கள் மர்மமான முறையில் இறப்பு



செழிப்பான நிலப்பரப்பையும், நீண்ட அழகான கடற்கரை பகுதியையும் கொண்ட தென் அமெரிக்க நாடு உருகுவே. இங்குள்ள கடற்கரை பகுதியில் கடந்த 10 நாட்களில் சுமார் 2000 பென்குயின் பறவைகள் இறந்திருக்கிறது. பென்குயின்கள் இறப்புக்கு காய்ச்சல் நோய் காரணம் இல்லை என்றும், இந்நிகழ்வின் காரணம் மர்மமாக உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

மகெல்லனிக் பென்குயின்கள் தெற்கு அர்ஜென்டினாவில் இனப்பெருக்கம் மேற்கொள்கின்றன. குளிர்காலத்தில், உணவு மற்றும் வெப்பமான நீரை தேடி அவை வடக்கே இடம்பெயர்ந்து, பிரேசில் நாட்டின் மாநிலமான எஸ்பிரிடோ சாண்டோ நகர கடற்கரையை அடைகின்றன. "தற்போது அட்லாண்டிக் பெருங்கடலில் இறந்திருக்கும் இந்த பறவையினங்கள் பெரும்பாலும் மிக இளம் வயது கொண்டவை. அவை உருகுவே நாட்டின் கரையோரங்களுக்கு நீரோட்டங்களால் கொண்டு செல்லப்பட்டிருக்கின்றன. இது தண்ணீரிலேயே ஏற்பட்டிருக்கும் இறப்பாகும். அவற்றின் உடல்களில் இருந்து எடுக்கப்பட்ட அனைத்து மாதிரிகளின் மூலம் இறப்புக்கு காரணம் பறவை காய்ச்சல் இல்லை என்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

ஒரு சில பறவைகள் இறப்பது இயல்பானது. ஆனால் இவ்வளவு அதிக அளவிலான எண்ணிக்கையில் இவை இறந்திருப்பது இயல்பானது அல்ல. கடந்த ஆண்டு பிரேசிலில் இதே போன்றதொரு சம்பவம் நிகழ்ந்தது என சுற்றுச்சூழல் அமைச்சகத்தின் விலங்கினங்கள் துறையின் தலைவர் கார்மென் லெய்சகோயன் கூறினார். அட்லாண்டிக் கடற்கரையின் 10 கிலோமீட்டர் நீளத்திற்கு, 500க்கும் மேற்பட்ட பென்குயின்கள் இறந்து கிடந்தன என லகுனா டி ரோச்சா எனப்படும் பாதுகாக்கப்பட்ட பகுதியின் இயக்குனர் ஹெக்டர் கேமரிஸ் தெரிவித்தார்.

அதிகபடியான மீன்பிடித்தலும், சட்டவிரோத மீன்பிடித்தலுமே இந்த உயிரினங்களின் இறப்பு அதிகரிப்பதற்கு காரணம் என சுற்றுச்சூழல் நிபுணர்கள் கூறுகின்றனர். அட்லாண்டிக் கடலில் ஒரு துணை வெப்பமண்டல சூறாவளி, ஜூலை மாத நடுப்பகுதியில் தென்கிழக்கு பிரேசிலை தாக்கியது. இதனால் ஏற்பட்ட மோசமான வானிலையால் பலவீனமான உயிரினங்கள் இறந்திருக்கக்கூடும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

## தானிய ஏற்றுமதி தடையால் பட்டினி சாவுகள் ஏற்படும் - ஐ.நா



ரஷியா - உக்ரைன் இடையேயான போர் 01 ஆண்டுகளாக நீடித்து கொண்டிருக்கிறது. இதில் உக்ரைன் துறைமுகங்களை ரஷிய படைகள் கைப்பற்றின. பல நாடுகளுக்கு கருங்கடல் வழியாக கோதுமை, பார்லி போன்ற தானியங்கள், சூரியகாந்தி எண்ணெய் உள்பட பல அத்தியாவசிய உணவு பொருட்களை உக்ரைன் ஏற்றுமதி செய்து வந்த நிலையில் போர் காரணமாக தடைப்பட்டது.

இதையடுத்து கடந்த ஆண்டு ஜூலை மாதம் ஐ.நா மற்றும் துருக்கி தலையிட்டு ரஷியாவுடன் கருங்கடல் தானிய ஒப்பந்தம் செய்தது. அதன்படி உக்ரைனின் மூன்று துறைமுகங்களில் இருந்து கப்பல்களில் தானிய ஏற்றுமதி செய்ய ரஷியா சம்மதித்தது. இந்நிலையில் கருங்கடல் தானிய ஒப்பந்தம் சமீபத்தில் காலாவதியான நிலையில் அதை புதுப்பிக்க ரஷியா மறுத்து அதிலிருந்து விலகுவதாக அறிவித்தது. இந்நிலையில், தானிய ஒப்பந்தத்தில் இருந்து ரஷியா விலகியதால் தானியங்களின் விலை உயர்வு, கோடிக்கணக்கான மக்களுக்கு பசி மற்றும் மோசமான அச்சுறுத்தலை ஏற்படுத்தி உள்ளதாக ஐ.நா தெரிவித்துள்ளது.

இது குறித்து ஐ.நா.வின் அவசர கால நிவாரண ஒருங்கிணைப்பாளர் மார்ட்டின் கிரிபித்ஸ் கூறும்போது, "தற்போது 69 நாடுகளில் சுமார் 36 கோடி மக்களுக்கு மனிதாபிமான உதவி தேவைப்படுகிறது. தானிய விலை உயர்வு என்பது வளரும் நாடுகளில் உள்ள குடும்பங்களை கடுமையாக பாதித்துள்ளது. பசி - பட்டினியால் வாடுவார்கள். இதன் காரணமாக பலர் இறக்கக்கூடும் என்றார். போதுமான உக்ரேனிய தானியங்கள் ஏழை நாடுகளை சென்றடையவில்லை என்று ரஷியா புகார் தெரிவித்து, ஒப்பந்தத்தில் இருந்து விலகியது என்பது குறிப்பிடத்தக்கது. உக்ரைனின் கருங்கடல் துறைமுகங்களுக்கு செல்லும் எந்த கப்பலையும் ராணுவ பொருட்கள் ஏற்றி செல்லும் கப்பலாக கருதப்படும் என்று ரஷியா தெரிவித்துள்ளது.

## சுவீடன் தூதரை வெளியேற்றியது ஈராக்

*சுவீடன் நாட்டின் ஸ்டாக்ஹோமில் நடைபெற்ற போராட்டத்தின்போது ஒருவர் இஸ்லாமியர்களின் புனித நூலான குர்ஆனை எரித்துள்ளார். இதற்கு உலகம் முழுவதும் உள்ள இஸ்லாமிய நாடுகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன.*

*இஸ்லாமியர்கள் அதிக அளவில் வாழும் நாடுகளில் குர்ஆன் எரிப்பு எதிராக போராட்டம் நடத்தி வருகிறார்கள். இஸ்லாமிய நாடுகளின் அமைப்பு ஐ.நா. சபையில் கண்டன தீர்மானம் கொண்டு வந்தது. இதை இந்தியா ஆதரித்தது என்பது குறிப்பிடத்தக்கது.*

*இதற்கிடையே, ஈராக் பாக்தாத்தில் உள்ள சுவீடன் தூதரகத்தை 100-க்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் முற்றுகையிட்டதோடு, தீ வைத்து சேதமாக்கினர். இந்த நிலையில் சுவீடன் தூதர் வெளியேற்றப்பட்டுள்ளார்.*

## பூமியில் மட்டுமல்ல, விண்வெளியிலும் போட்டி



உலகின் நம்பர் 1 கோடீஸ்வரரான எலான் மஸ்கின் பல நிறுவனங்களில் ஒன்று ஸ்பேஸ்எக்ஸ். அமெரிக்காவின் கலிபோர்னியா மாநிலத்தை தலைமை யிடமாக கொண்ட இந்நிறுவனம், செயற்கைக்கோள் தகவல் தொடர்பிலும், விண்கல உற்பத்தியிலும் ஏவுகணை தொடர்பான சேவைகளை வழங்குவதிலும் முன்னணியில் உள்ள தனியார் நிறுவனமாக உள்ளது.

இந்நிறுவனத்திற்கு போட்டியாக விண்வெளி இணையச்சேவையைத் தொடங்கும் தனது திட்டத்தின் ஒரு பகுதியாக, அமெரிக்காவின் நாசாவுக்கு சொந்தமான கென்னடி விண்வெளி மையத்தில் ஒரு செயற்கைக்கோள் கட்டுமான வசதியை உருவாக்க சுமார் ஆயிரம் கோடி முதலீடு செய்யப்போவதாக அமெரிக்காவின் இணையதள வர்த்தக நிறுவனமான அமேசான் தெரிவித்திருக்கிறது.

அதன் புராஜெக்ட் குய்ப்பர் எனும் திட்டத்தின் மூலம் உலகம் முழுவதும் சேவை செய்யப்படாத மற்றும் குறைவான சேவைகளையே பெற்று வரும் சமூகங்களுக்கு வேகமான, தடையற்ற, குறைந்த விலையில் பிராட்பேண்ட் சேவைகளை அமேசான் வழங்கும். இதற்காக புவியின் கீழ் சுற்றுப்பாதையில் 3200-க்கும் மேற்பட்ட செயற்கைக்கோள்களை அமேசான் நிறுவப்போகிறது. முழு அளவிலான உற்பத்தி வெளியீடுகள் மற்றும் ஆரம்ப வாடிக்கையாளர்களுக்கான "பைலட்" திட்ட செயலாக்கங்களை அடுத்த ஆண்டு அமேசான் தொடங்கும் என்று இத்திட்டத்தின் துணைத்தலைவர் ஸ்டீவ் மெட்டேயர் தெரிவித்துள்ளார்.

ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம், 3700-க்கும் மேற்பட்ட செயல்பாட்டு ஸ்டார்லிங்க் செயற்கைக்கோள்களின் முதல் தொகுப்பை 2019-ல் அறிமுகப்படுத்தியது குறிப்பிடத்தக்கது. இத்துறையில் ஈடுபட்டு வரும் மற்றோரு நிறுவனம், இங்கிலாந்தின் லண்டனை தலைமையிடமாகக் கொண்ட ஒன்வெப். தற்போது இப்போட்டியில் அமேசானும் இறங்கியிருக்கிறது. இந்த 3 நிறுவனங்கள் மட்டுமல்லாமல், இணைய சேவையுடன் பல்வேறு தொழில்நுட்ப காரணங்களுக்காக சீனா - 13000, கனடா - 300 மற்றும் ஜெர்மனி - 600, ஐரோப்பிய ஒன்றியம்- 170, அமெரிக்கா - 300-லிருந்து 500 எனும் எண்ணிக்கையில் பல நாட்டு அரசாங்கங்கள் செயற்கைகோள்களை வானில் ஏவ திட்டமிட்டிருக்கிறது.

## இந்தியாவின் பெட்ரோல், டீசல் விற்பனை சரிவு



இந்த ஜூன் மாதத்தின் முதல் பாதியில் இந்தியாவின் பெட்ரோல், டீசல் விற்பனை சரிவைக் கண்டுள்ளது. இது குறித்து பூர்வாங்க புள்ளிவிபரங்கள் தெரிவிப்பதாவது, கடந்த ஜூலை 1 முதல் 15 ஆம் திகதி வரையிலான காலகட்டத்தில், நாட்டின் எரிபொருள் பயன்பாட்டில் 5 இல் 2 பங்கு வகிக்கும் டீசலின் விற்பனை 29.6 லட்சம் டன்னாக உள்ளது. கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 15 சதவீதம் சரிவாகும்.

2022 ஆம் ஆண்டின் ஏப்ரல், மே மாதங்களோடு ஒப்பிடுகையில், கடந்த ஏப்ரல், மே மாதங்களில் டீசல் விற்பனை முறையே 6.7 சதவிகிதம் மற்றும் 9.3 சதவிகிதம் உயர்ந்தது. அந்த மாதங்களில் விவசாய நடவடிக்கைகள் அதிகரித்தது, கோடையின் வெப்பத்தை சமாளிக்க கார்களில் குளிரூட்டிகள் அதிகம் பயன்படுத்தப்பட்டது போன்ற காரணங்களால் டீசலின் விற்பனை அதிகரித்தது.

ஆனால், ஜூன் மாதத்தில் பருவமழை காரணமாக வெப்பம் தணிந்ததாலும், விவசாய நடவடிக்கைகளுக்கான எரிபொருள் தேவை குறைந்ததாலும் டீசல் விற்பனை சரிந்தது. அதன் தொடர்ச்சியாக, இந்த ஜூலை மாதத்தின் முதல் 15 நாள்களிலும் இதே காரணங்களால் டீசல் விற்பனை சரிவைக் கண்டுள்ளது. மதிப்பீட்டு காலகட்டத்தில் நாட்டின் பெட்ரோல் விற்பனை 10.5 சதவீதம் குறைந்து 12.5 லட்சம் டன்னாக உள்ளது. கடந்த ஜூன் மாதத்துடன் ஒப்பிடுகையில் அதன் விற்பனை 10.8 சதவீதம் குறைந்துள்ளது. ஜூலை 1 - 15 காலகட்டத்தில் சமையல் எரிவாயு (எல்பிஜி) விற்பனை 12.7 லட்சம் டன்னாக உள்ளது. முந்தைய 2022 ஆம் ஆண்டின் இதே காலகட்டத்தோடு ஒப்பிடுகையில் இது 6.3 சதவீதம் குறைவாகும் என்று அந்த புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

## கலைக்கப்படும் பாகிஸ்தான் பாராளுமன்றம்

தற்போதைய பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஓகஸ்ட் 12 நள்ளிரவுடன் முடிவடைவதை அடுத்து பாகிஸ்தான் பாராளுமன்றம் ஓகஸ்ட் 8 ஆம் திகதி கலைக்கப்படும் என தகவல் வெளியாகி உள்ளது.

பாகிஸ்தான் பாராளுமன்றத்தின் பதவிக்காலம் வரும் ஓகஸ்ட் 12 ஆம் திகதியுடன் முடிவடைகிறது. ஐந்தாண்டு பதவிக்காலம் முடிவதற்கு சில நாட்களுக்கு முன்னதாக, தற்போதைய பாராளுமன்றத்தை கலைக்க நாட்டின் மிக முக்கிய ஆளும் கூட்டணி கட்சிகளான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சியும், பாகிஸ்தான் மக்கள் கட்சியும் ஒப்புக்கொண்டதாகவும் அந்நாட்டு ஊடகங்களில் செய்தி வெளியாகி உள்ளன.

இந்த நிலையில் பாராளு மன்றத்தைக் கலைக்கும் திகதி இன்னும் முடிவாகவில்லை. கூட்டணி கட்சிகளுடனான உரிய ஆலோசனைக்குப் பிறகு அதிகாரபூர்வமாக அரசு தனது முடிவை அறிவிக்கும் என பாகிஸ்தான் தகவல் தொடர்பு அமைச்சர் மரியம் ஔரங்கசீர் தெரிவித்துள்ளார். பாராளுமன்றம் கலைக்கப்பட்டாலும் அடுத்த அரசு அமைக்கப்படும் வரை காபந்து அரசு பிரதமராக ஷெரீப் தனது கடமைகளை தொடர்வார்.

அரசியலமைப்புச் சட்டத்தின்படி, பாராளுமன்றம் விரைவில் கலைக்கப் படாவிட்டால், பாராளுமன்றத்தின் பதவிக்காலம் முடிவடையும் நாளுக்குப் பிறகு உடனடியாக 60 நாட்களுக்குள் நாடாளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

எவ்வாறாயினும், பாக்கிஸ்தானின் தேர்தல் ஆணையம் அதன் அரசியலமைப்பு காலத்திற்கு முன்னர் பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் 90 நாட்களுக்குள் பொதுத் தேர்தலை நடத்த வேண்டும். பாகிஸ்தான் முஸ்லிம் லீக் நவாஸ் கட்சி தலைமையிலான பாகிஸ்தான் ஜனநாயக இயக்கம் கூட்டணி பாராளுமன்றத்தை கலைப்பது தனக்கு சாதகமாக இருக்கும் என்று நினைக்கிறது.



















இப்பத்திரிகை இலக்கம் 154ஏ, தேக்கவத்தையில் அமைந்துள்ள தென்றல் அச்சகத்தில் அச்சிட்டு, தினப்புயல் நிறுவனத்தால் 23.07.2023 அன்று வெளியிடப்பட்டது.